Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 8, 2021

திங்கட்கிழமை நவம்பர் 08, 2021 | ஒளி: 07 கதிர்: 147 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

## வைபவங்களுக்கு மீண்டும் கட்டுப்பாடுகள்?




கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரிக்குமாயின், மீண்டும் கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்படுமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

பொறுப்பற்ற வகையில் மக்கள் நடந்துகொள்வார்களாயின் விருப்பமின்றியேனும் மீண்டும் கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டிய நிலைமை ஏற்படுமெனத் தெரிவித்துள்ள பணிப்பாளர் நாயகம், பல விழாக்கள், விருந்துபசாரகள், திருமண வைபவங்கள் ஊடாகவே கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பது தொடர்பில் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். பொதுமக்கள் இவ்வாறு நாளுக்கு நாள் பொறுப்பற்ற விதத்தில், செயற்படுவார்களாயின், பொது வைபவங்களுக்கு மீண்டும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சீரற்ற வானிலையால் ஐவர் மரணம்



நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட பல்வேறு அனர்த்தங்களில் சிக்கி இதுவரை ஐவர் மரணித்துள்ளனர்.

முல்லைத்தீவு, பதுளை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இந்த மரணங்கள் பதிவாகியுள்ளன. மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். ஒருவர் காணாமல் போயுள்ளார்.

அத்துடன், தொடரும் மழையுடன் கூடிய வானிலையால், 12 மாவட்டங்களில் 1,143 குடும்பங்களைச் சேர்ந்த 4,391 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



இரண்டாம் கட்ட

## கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பம்

### நாளை தேசிய போராட்டம்

கொரோனா தொற்றுக் காரணமாக மூடப்பட்ட பாடசாலைகளில் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி 10, 11, 12, 13ஆம் வகுப்புகளுக்கான கற்பித்தல் இன்று (08) முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

இராணுவத்தைக் கொண்டு

## கழுத்தைப் பிடித்து ஆட்சிசெய்ய முடியும்



**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்: தான் அதை விரும்பவில்லை என்றும் கூறினார்**

இராணுவத்தினரைக் கொண்டு விவசாயிகளின் கழுத்தைப் பிடித்து, சேதனப் பசளையை பயன்படுத்த வைப்பதற்கு தன்னால் முடியும் என்று தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவ்வாறு பலத்தை பிரயோகிப்பதற்குத் தான் விரும்பவில்லை என்றும் தெரிவித்தார். புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட 1,500 வீதிகளை ஒரே நாளில் மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வின் பின்னர், நேற்று (06) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மும்தாஜ் படுகொலை; ஜோடிக்கு விளக்கமறியல்



மாளிகாவத்தை தொடர்மாடியில் வசித்து வந்த நிலையில், சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்துக்கு அருகில் பயணப் பையிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட, 44 வயதான பாத்திமா மும்தாஜின் படுகொலை தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மட்டக்குளியைச் சேர்ந்த ஜோடியை தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மட்டக்குளியைச் சேரந்த கணவனும் மனைவியும், மஹர பதில் நீதவான் முன்னிலையில் நேற்று (07) ஆஜர்படுத்தப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## 2022 பட்ஜெட் வெள்ளி சமர்ப்பிப்பு




2022 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்டம், பாராளுமன்றத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (12) சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பசில் ராஜபக்ஷ, நிதியமைச்சராக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், சமர்ப்பிக்கப்படும் முதலாவது வரவு-செலவுத்திட்டம் இதுவாகும்.


இயன்றவரை வினைத்திறனுடன் காணி வளங்களை பயன்படுத்துதல், இயன்றவர்களையும் விரும்பாதவர்களையும் வெல்வது.

தொடர்ச்சி P2

டெங்கு தொற்றாளர்கள்

## சடுதியாக அதிகரிப்பு

### இன்று முதல் விசேட வேலைத்திட்டம்



நாடளாவிய ரீதியில் டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இம்மாதத்தின் முதல் 04 நாள்களில் மாத்திரம் 505 டெங்கு தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் என அப்பிரிவின் பணிப்பாளர் டொக்டர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதத்தில், டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை 2,979ஆக பதிவாகியுள்ளது.

அத்துடன், அடுத்து வரும் சில வாரங்களில் டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2





சிசு கொலை:

## மகளை கர்ப்பமாக்கிய தந்தை கைது

■ பாறுக் ஷிஹான்

பிறந்து மூன்று நாள்களேயான சிசுவின் சடலம், கிட்டங்கி ஆற்றங்கரையில் வீசப்பட்ட நிலையில் வெள்ளிக்கிழமை (05) பொலிஸாரால் மீட்கப்பட்டது.

சம்மாந்துறைப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, அம்பாறை மாவட்டத்தின் சொறிக் கல்முனை - சம்மாந்துறை பிரதான வீதியின் கிட்டங்கி ஆற்றில் இச்சிசுவின் சடலம் மீட்கப்பட்டது.

இது தொடர்பாக, சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்னல் கிராமம் - 01 கிராம சேவையாளர் பிரிவில் வசித்துவரும் 41 வயது நபரொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

## திருடர்களை மறைக்க வேண்டாம்



விட்ரோ எரிவாயு ஊழலுக்குப் பின்னால் உள்ள திருடர்களை மறைப்பதை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### உள்ளே



தமிழ் முற்போக்கு கூட்டணி

பொகவந்தலாவையில் போராட்டம்

## மூத்த எம்.பிக்களுக்கு மூன்றாவது டோஸ்



60 வயதுக்கும் மேற்பட்ட வேறு நோய் அறிகுறிகள் தென்படும் அல்லது நீண்டகாலமாக நோய்களால் பீடிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மூன்றாவது டோஸ் வழங்குவதற்கு.

தொடர்ச்சி P2

மக்கள் பிரச்சினைகளைத் தீர்த்து

## தார்மீக பொறுப்புடன் செயற்படவும்

### அரசாங்கத்துக்கு ரிஷாட் எம்.பி அறிவுரை

■ ஹஸ்பர் ஏ ஹலீம்



பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து, தார்மீக பொறுப்புடன் செயற்படுமாறு, பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன், அரசாங்கத்துக்கு அறிவுரை வழங்கினார்.

தொடர்ச்சி P2

## 468 பேர் கைது

மேல் மாகாணத்தில் முன்னெடுக்கட்ட விசேட சுற்றிவளைப்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 468 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் ஆலோசனையின் பேரில் சனிக்கிழமை (06) காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை இந்தச் சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2





## கோவிலை கடல் விழுங்கும் அபாயம்

■ வி.ரி.சகாதேவராஜா

கல்முனையை அடுத்துள்ள பாண்டிருப்பில் பாரிய கடலரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட பாண்டிருப்பு கடற்கரைப் பகுதியில் உள்ள 20க்கு மேற்பட்ட தென்னை மரங்கள் 30 மீற்றர் கொங்கிரீட் வீதி கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இந்நிலையில், ஏற்கெனவே சுனாமியால் பாதிக்கப்பட்டு, அண்மையில் மீள் புனருத்தாரணம் செய்யப்பட்டு, விரைவில் மகா கும்பாபிஷேகம் காணவிருக்கும் பாண்டிருப்பு விஷ்ணு கோவிலுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. கோவில் முன்னாலுள்ள கொங்கிரீட் வீதி கடலுக்குள் அள்ளுண்டுள்ளது. கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் ஸ்தலத்துக்குச் சென்று, கோவில் நிர்வாகிகளுடன் கலந்துரையாடியதோடு,

தொடர்ச்சி P2

குருநாகலில் கார் திருட்டு:

## மாலபேயில் கண்டுபிடிப்பு

### போலி சான்றிதழ் அச்சடித்த பெண் கைது



குருநாகலில் உள்ள உரிமையாளரின் வீட்டுக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த போது திருடப்பட்ட 9 மில்லியன் ரூபாய் பெறுமதியான கார், மாலபேயில் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில், திருடப்பட்ட வாகனம் கண்டுபிடிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்கள், வாகனத்தை திருட பயன்படுத்திய மற்றுமொரு வாகனம் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கடந்த 2ஆம் திகதி, கொகரெல்ல பகுதியில் வைத்து திருடப்பட்ட வாகனத்தை கண்டுபிடிப்பதற்காக குருநாகல் பிரதேச குற்றத்தடுப்பு பிரிவினரால் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2



## அரசாங்கத்தை வீடு நெருங்கி வருகிறது

■ எம்.சி. அன்சார்

பொருளாதாரத் தோல்வியின் விளிம்பில் காணப்படுகின்ற இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புகின்ற காலம் நெருங்கி வருகின்றது என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

lk Newspapers Viber Community

PAGE 1 தொடர்ச்சிகள்

## வைபவங்களுக்கு மீண்டும் கட்டுப்பாடுகள்?

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை, நேற்றுமுன்தினம் 617ஆக அதிகரித்துள்ளது. அதேநேரம், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மரணித்தோரின் எண்ணிக்கை நேற்றுமுன்தினம் (06) அதிகரித்துள்ளது. அன்றையதினம் 20 பேர் மரணித்துள்ளனர். அதில், 14 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பம்

சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய பிள்ளைகள் பாடசாலைக்கு அனுப்பப்படுவதை பெற்றோர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என கல்வி அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, ஆசிரியர் -அதிபர் சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வு கோரி, நாளை செவ்வாய்க்கிழமை (09) தேசிய போராட்ட தினமாக பிரகடனப்படுத்த ஆசிரியர்  அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்புத் தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு வலயக் கல்வி அலுவலகம் முன்பாகவும் இந்தப் போராட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அனைத்து கல்வி சார் ஊழியர்களையும் கடமைக்கு திரும்ப அழைக்க வேண்டும் என்பதுடன், அனைத்து கல்விசாரா ஊழியர்களும் இம்மாதம் 8ஆம் திகதி முதல் பணிக்கு திரும்ப அழைக்கப்பட வேண்டும்.

ஊழியர்களிடையே, கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பெற்றவர்கள் மற்றும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட கல்வி சேவை பணியாளர்கள் மிகவும் அவசியமான போது மட்டுமே வேலைக்குச் செல்ல வேண்டும்.

எவ்வாறாயினும், குறித்த விடயத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து வலயக் கல்விப் பணிப்பாளரிடம் அனுமதி பெற்றதன் பேரில் இது செய்யப்பட வேண்டும்.

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும் ஆரம்ப நாட்களில் மாணவர்களுக்கு பாடசாலை சீருடைகள் கட்டாயமில்லை எனவும், மாணவர்களுக்கு பொருத்தமான உடையில் பாடசாலைக்கு வருவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமெனவும் கல்வி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# கழுத்தைப் பிடித்து ஆட்சிசெய்ய முடியும்

நான் இராணுவ ஆட்சியாளராக வருவேன் என்று எதிர்பார்த்து மக்கள் எனக்கு வாக்களித்தனர். ஓர் இராணுவ அதிகாரியைப் போல மக்களை கழுத்தைப் பிடித்து ஆட்சி செய்ய முடியும், ஆனால் நான் அப்படி இல்லை என்றார்.

அப்படி நாட்டை ஆள விரும்பவில்லை. நான் ஆட்சிக்கு வந்தால் ஜனநாயகம் அழிந்துவிடும் என்று சிலர் கூறுகின்றனர், ஆனால் அவ்வாறு பலத்தை பிரயோகிக்க நான் விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டார்.

'நல்லாட்சி' அரசாங்கத்தின் கீழ், முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் பாரிய பரிவாரங்களுடன் பயணம் செய்திருந்தனர் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நான், அமெரிக்காவுக்கு சென்றிருந்த வேளையில், எனக்கு பின்னால் 15 வாகனங்கள் பயணித்தன. இங்கு, இரண்டு வாகனங்கள் மட்டுமே, எனது வாகனத்துக்குப் பின்னால் பயணிக்கிறது. அதேபோலதான், நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த தாம் விரும்புவதாக தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டில் கலந்துகொண்டபோது, தனது மனைவியுடன் சாதாரண ஹோட்டலில் தங்கியதாகவும் மனைவியின் விமான டிக்கெட் மற்றும் ஹோட்டல் தங்குவதற்கு தான் பணம் செலுத்தியதாகவும் சுட்டிக்காட்டினார்.

தன்னுடன் 7 பேர் மட்டுமே பயணம் செய்தாகவும் முந்தைய ஜனாதிபதிகள் சொகுசு விடுதிகளில் தங்கியிருந்ததாக சிலர் தன்னிடம் கூறியதாகவும் தெரிவித்த அவர், தான் அப்படிச் செய்யவில்லை என்றும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது என்றும் குறிப்பிட்டார்.



## சீரற்ற வானிலையால் ஐவர் மரணம்

அதேவேளை, 7 மாவட்டங்களுக்கு பிறப்பிக்கப்பட்டுள்ள மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்து நீடிக்கப்பட்டுள்ளது.

பதுளை, இரத்தினபுரி, மாத்தளை, கேகாலை, கண்டி, குருணாகல் மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கே இந்த மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் அடுத்த சில நாள்களில் மழை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கு அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் குறிப்பாக மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 75 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

## மும்தாஜ் படுகொலை;...

இதன்போதே, அவ்விருவரையும் 48 மணிநேரம் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்துமாறும், இன்றையதினம் (08) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மாளிகாவத்தை பாத்திமா மும்தாஜ், வியாழக்கிழமை (04) பயணப் பையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். அவரது சடலத்தை கணவன் அடையாளம் காட்டினார். அதனையடுத்தே, மட்டக்குளிய சமித்புரவைச் வசிப்பிடமாகக் கொண்ட 46 வயதான கணவன் மற்றும் அவருடைய மனைவியை பொலிஸார், நேற்று முன்தினம் (06) கைது செய்தனர்.

## 2022 பட்ஜெட் வெள்ளி சமர்ப்பிப்பு

உற்பத்திப் பொருளாதாரத்தில் கவனம் செலுத்துவது போன்றவற்றில் இந்த வரவு -செலவுத் திட்டம் கவனம் செலுத்துமென அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாக தெரிவுச் செய்யப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் இரண்டாவது வரவு-செலவுத்திட்டம் இதுவென்பதுடன், நாட்டின் 76 ஆவது வரவு- செலவுத் திட்டமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

கொவிட் சவால்களை வெற்றிகொண்டு, வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதனை இலக்காகக் கொண்டு, எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு, நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என அரசாங்கத் தகவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்முறை வரவு-செலவுத் திட்டம் தயாரிப்பின்போது, பெரும் நூற்றுக்கும் மேற்பட்டோரிடமிருந்து ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன. நிதியமைச்சின் வேலைத்திட்டத்துக்கு அமைவாக, நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களின் அபிப்பிராயங்களும் இதற்குப் பெறப்பட்டுள்ளன என்றும் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் வைரஸ் தொற்றுக்கு மத்தியில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பொருளாதாரத்துக்குகு மிகுந்த அழுத்தம் ஏற்பட்டிருக்கின்றது.

எனவே, கொவிட் சவால்களை வெற்றிகொண்டு, வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதனை இலக்காகக் கொண்டு, எதிர்வரும் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என நிதியமைச்சு அறிவித்துள்ளது.

## சடுதியாக அதிகரிப்பு

இதையடுத்து, நுளம்புகள் பெருகும் இடங்களை ஒழிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்றை, இன்று (08) முதல் இம்மாதம் 13ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்த சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தீர்மானித்துள்ளது.

மேற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தெரிவுசெய்யப்பட்ட 59 உயர் ஆபத்துள்ள பகுதிகளில் இது ஆரம்பிக்கப்படுமென அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

## திருடர்களை மறைக்க வேண்டாம்



ஊடகங்களுக்கு, நேற்று (07) கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார். லிட்ரோ கேஸ் லங்காவின் தலைவர் ஆதாரமற்ற கருத்துக்களை வெளியிடுவதை நிறுத்திவிட்டு, திருடர்கள் யார் என்பதை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற அவர், உரிய சட்ட நடவடிக்கை எடுக்க ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றார்.

அது மக்களின் உரிமை என்றும் ஆனால், திருடர்களை மறைப்பதற்கு தமது அதிகாரங்களை அரசாங்கம் பயன்படுத்துவதே பிரதான கவலையாகும் என்றும் குறிப்பிட்டார்.

அனைத்து மோசடிகளும் முன்னர் மூடி மறைக்கப்பட்டதைப் போலவே, இதுவும் அரசாங்கத்தால் மறைக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்துடன் இணைந்து தற்போது "எரிவாயு மாபியா" ஒன்று இயங்கி வருவதாகவும், இதனால் நாட்டு மக்களுக்கான தடையற்ற எரிவாயு விநியோகம் தடைபடுவதாகவும் லிட்ரோ கேஸ் லங்கா நிறுவனத்தின் தலைவர் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மூத்த எம்.பிக்களுக்கு மூன்றாவது டோஸ்



சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தீர்மானித்துள்ளார்.

இவ்வாறு மூன்றாவது டோஸாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஃபைசர் தடுப்பூசியே வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

"60 வயதுக்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மூன்றாவது டோஸ் தடுப்பூசியை வழங்குமாறு, பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ, சுகாதார பணிப்பாளர் நாயக்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார். அதன்பிரகாரமே மூன்றாவது டோஸ் வழங்கப்படவுள்ளது.

அதனடிப்படையில், 60 வயதுக்கும் மேற்பட்ட எம். பிக்களுக்கு இராணுவத் தலைமையகத்தில், இன்று (08) முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரையிலும் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையிலும் மூன்றாவது தடுப்பூசி செலுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதியன்று வரவு-செலவுத்திட்டம், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதால், அன்றையதினம் மட்டும் நேரத்தில் சிறு மாற்றங்கள் செய்யப்படலாமென தகவல்கள் தெரிவிக்கின்றன.

60 வயதுக்கும் மேற்பட்ட எம்.பிக்களுக்கு மூன்றாவது தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னர், ஏனைய எம். பிகளுக்கும் பணியாட் தொகுதியினருக்கும், இதர உறுப்பினர்களுக்கும் மூன்றாவது தடுப்பூசியை செலுத்தும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என்றும் படைக்கல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

## மகளை கர்ப்பமாக்கிய தந்தை கைது

தனது 19 வயதுடைய மகளுடன் தகாத உறவில் ஈடுபட்டு பிறந்த சிசுவையே இவ்வாறு ஆற்றுக்குள் வீசியதாக கைதாகிய சந்தேகநபர், பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபருடன் குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் மற்றும் அம்பாறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர், இராணுவத்தினர் ஒன்றிணைந்து வீசப்பட்ட சிசுவின் சடலத்தை மீட்டெடுத்தனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி ஐ.என். றிஸ்வான், உயிரிழந்து சிசுவை பார்வையிட்டதுடன், பிரேத பரிசோதனையை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

இதனையடுத்து, அம்பாறை ஆதார வைத்தியசாலைக்கு சிசுவின் சடலம் எடுத்துச்செல்லப்பட்டது.

நாளாந்த கூலி தொழிலாளியான சந்தேக நபர், இரண்டு திருமணம் செய்தவர் என்பதுடன், தற்போது மனைவிமார்களுடன் இல்லாத நிலையில், முதல் திருமணத்தில் பிறந்த 19 வயதுடைய தனது மகள் மற்றும் இரண்டாவது திருமணத்தில் பிறந்த 2 பிள்ளைகளுடனும் வாழ்ந்து வந்த நிலையில், இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை, சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 'தார்மீக பொறுப்புடன் செயற்படவும்'

பெரிய எதிர்பார்ப்புடன் மக்கள் வாக்களித்தார்கள். ஆனால், இன்று விவசாயிகள் வீதியில் நிற்கிறார்கள். உரப் பிரச்சினை,கேஸ் இல்லை, அத்தியவசிய பொருள்களின் விலை கட்டுப்பாடு இல்லாமல் பொதுமக்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கந்தளாயில் நேற்று முன்தினம் (06) மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது, ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், "சீனி மற்றும் அரிசி விலை உயர்வு எல்லாமே பிரச்சினைகளாகத்தான் இருக்கின்றன. ஊடகங்களை திறந்தால் மக்கள் தங்களது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து, வீதிக்கு இறங்கியதைக் காண முடிகிறது.

"ஆசிரியர்கள், அதிபர்களும் இவ்வாறு நியாயமான முறையில் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வைக் கோருகிறார்கள்.

"இவற்றைத் தீர்த்து வைப்பதில் அரசாங்கத்துக்கு தார்மீக பொறுப்பு உள்ளது. எனவே, அரசாங்கம் இதனை தீர்த்து வைக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்" என்றார்.

## 468 பேர் கைது

இதன்போது பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 70 பேரும் இலஞ்ச ஊழல் குற்றங்களுடன் தொடர்புடைய 593 பேரும் ஏனைய குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 1,019 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

## கோவிலை கடல் விழுங்கும் அபாயம்

கடலோரப் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர் எஸ்.அருணனிடன் இது விடயத்தை எடுத்துரைத்தார்.

இதனையடுத்து, கடலோரப் பகுதியில் கல் அணை இடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உத்தியோகத்தர் அருணன், உறுப்பினர் ராஜனிடம் உறுதியளித்தார்.

இதேவேளை, கடந்த சில நாள்களாக ஏற்பட்ட கடலரிப்பினால் பாண்டிருப்பு கடற்கரை பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கபட்டிருந்த வீதிகளின் ஒரு பகுதி முற்றாக இடிந்து, கடலுக்குள் வீழ்ந்துள்ளது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்துச் செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

## மாலபேயில் கண்டுபிடிப்பு



சந்தேகநபர்கள், தாம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனக் கூறி குருநாகலில் உள்ள உரிமையாளரின் வீட்டுக்குள் நுழைந்து வாகனத்தை திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் பெண் அதிகாரி, கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

3 மோட்டார் சைக்கிள்களின் பதிவு சான்றிதழ்களை போலியாக அச்சடித்த கொடுத்தமை தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## அரசாங்கத்தை வீடு நெருங்கி வருகிறது

கொரோனா பரவலுக்கு மத்தியிலும் என்ன பொருளாதார கொள்கையினை அரசாங்கம் கடைபிடித்தாலும் அவர்களின் அண்மைக்கால நகர்வுகள் நாட்டில் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வினை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு கைமீறிவிட்டது என்றும் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். .

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்த மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று(07) ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எஸ். ரி.ஆர். அமைப்பின் தலைவர் ஹாதீக் இப்றாஹீம் தலைமையில் இடம்பெற்றது. அதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வை, சம்மாந்துறை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எஸ். ரி.ஆர். அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையிலே நாட்டில் இன்று விவசாயிகள், ஆசிரியர்கள், மின்சார சபை ஊழியர்கள், துறைமுக ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கள் என தொடர் போராட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. பொருட்களின் விலைகளில் எந்தக் கட்டுப்பாடுகளும் கிடையாது. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் கிடையாது. அத்தியாவசியப் பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்கும் வர்த்தமானியும் அரசாங்கம் வெளியிட்டுள்ளது. ஏனெனில் அரசாங்கத்தினால் பொருட்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது.

எனவே, அரசாங்கத்தின் அனைத்து வேலைத்திட்டங்களும் தோல்வியடைந்து, பொருளாதாரத் தோல்வியின் விளிம்பில் காணப்படுகின்ற இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புகின்ற காலம் நெருக்கி வருகின்றது. என்றார்.

LK Newspapers Viber Community



# சாதாரண தரம், உயர் தரம் இன்று ஆரம்பம்

## 'சுரக்ஷா' மாணவர் காப்புறுதியைப் பெற்றுக்கொள்வது எப்படி?



வி.ரி. சகாதேவராஜா
(உதவி கல்விப் பணிப்பாளர்)



கொவிட் -19 பெருந்தொற்றால் இழந்த கல்வியை மீட்க, அரசாங்கம் பல வகையான வேலைத்திட்டங்களை அமல்படுத்தி, படிப்படியாக நான்கு கட்டங்களாகப் பாடசாலைகளைத் திறந்துவருகிறது.

அதன்படி, மூன்றாம் கட்டமாக இன்று எட்டாம் திகதி, தரம் 10, 11, 12, 13 ஆகிய வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை, கல்வியமைச்சு மேற்கொண்டு வருகிறது.

க.பொ.த (சா/ த) முதல் வருடம் என அழைக்கப்படும் தரம் 10, சாதாரண தரத்தின் இரண்டாம் வருடம் என அழைக்கப்டும் தரம் 11 மற்றும் உயர்தர 1ஆம் 2ஆம் வருட மாணவர்கள் இவ்வாறு பாடசாலைக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

நான்காம் கட்டமாக, தரம் ஆறு முதல் தரம் ஒன்பது வரையான மாணவர்களை எப்போது அழைப்பது என்பதை, இன்னும் கல்வியமைச்சு வெளியிடவில்லை. எனினும், அதுவும் அடுத்தவாரம் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

ஏலவே, ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கான சகல பாடசாலைகளும் திறக்கப்பட்டு, எவ்வித விக்கினமுமின்றி வெற்றிகரமாக, அதிபர், ஆசிரியர், மாணவர் ஆகியோரின் பூரண ஒத்துழைப்புடன் நடைபெற்றுவருகின்றன.

இவ்வாறு, பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு வருகையில், தமது பிள்ளைகளுக்கு உரிய சுரக்ஷா காப்புறுதி பற்றி, பெற்றோர்கள் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. உதாரணமாக, கொரோனா தனிமைப்படுத்தல் தொடக்கம், வைத்தியசாலை செலவுகளுக்கும் கூட, இச் சுரக்ஷா காப்புறுதி உதவிசெய்கிறது.

### 'சுரக்ஷா' மாணவர் காப்புறுதி பற்றி பெற்றோர் கட்டாயம் அறிந்திருக்க வேண்டிய சில தெளிவுகள்:

பாடசாலையில் தரம் 1-13 வரை கற்கின்ற மாணவர்கள் அனைவரும், சுரக்ஷா காப்புறுதி பெற உரித்துடையவர்கள்.

மூன்று தொகுதிகளாக இது வழங்கப்படுகிறது.

1. சுகாதார காப்புறுதி
2. விபத்துக் காப்புறுதி
3. ஆயுள் காப்புறுதி

### வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுதல்:

பணம் கட்டும் அரச வைத்தியசாலையில் அல்லது, தனியார் வைத்தியசாலையில் மாணவர் தங்கி சிகிச்சை பெறும்போது, ஒரு நாளைக்கு ரூபாய் 12,500.00 என்ற அடிப்படையில் இரண்டு இலட்சம் வரை காப்புறுதி வழங்கப்படுகிறது.

பணம் கட்டாத அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் போது, ஓர் இரவுக்கு ரூபாய் 1000.00 என்ற அடிப்படையில், குறித்த மாணவருக்கு காப்புறுதித் தொகை வழங்கப்படுகிறது.

அதேபோல், குறித்த நோய்க்கான சிகிச்சை, இலங்கையில் இல்லாத போது, வைத்திய ஆலோசனைப்படி வெளிநாடு செல்வதாக இருந்தால், வெளிநாட்டு சிகிச்சைக்கான செலவும் காப்புறுதியில் குறித்த மாணவனுக்கு வழங்கப்படுகிறது.

வைத்தியசாலையில் தங்காது, வெளி வாரியாகச் சிகிச்சை பெறும்போது, சிகிச்சை பெறுவதற்கான கொடுப்பனவு ரூபாய் 10,000.00 ஆகும். MRI scan, CT scan, EEG, DMSA scan, DTPA scan, Ultrasound scan போன்ற பரிசோதனைகளைச் செய்வதற்கு ஏற்படும் செலவுகளையும் காப்புறுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

பற்களில் இடைவெளி நிரப்புவதற்கு அல்லது கழற்றுவதற்கு ஏற்படக்கூடிய செலவுகளையும் பெறலாம்.

கை, கால் உடைந்துள்ள நிலையில், ஆயுர்வேத சிகிச்சை பெறினும் அதற்கும் கொடுப்பனவு பெறலாம்.

கண்ணாடி எடுப்பதற்கும், காது கேட்பதில் குறைபாடு உள்ளவர்கள் அதற்குரிய உபகரணத்தை எடுப்பதற்காகவும் காப்புறுதிப் பணத்தைப் பெறலாம்.

கடுமையான நோய்களின் போது, இருதய சத்திர சிகிச்சை, புற்றுநோய், சிறுநீரகப் பிரச்சினைகள், தலசீமியா, செயற்கையான கை, கால்கள் கொள்வனவு செய்தல், ஈரல் சம்பந்தமான சத்திர சிகிச்சைகள் போன்றவற்றின் போது, இரண்டு இலட்சம் முதல் 15 இலட்சம் வரை காப்புறுதித் தொகை பெறலாம்.

### விபத்துக் காப்புறுதி

விபத்துகளின் மூலம், முழுமையாகப் பாதிக்கப்பட்டு, ஆயுள் முழுதும் அங்கவீனமானவர்களுக்காக (உதாரணமாக, இரண்டு கண்ணும் தெரியாமல் போதல், இரண்டு காதுகளும் கேட்காமல் போகுதல்) இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது.

அதேபோல், ஒரு கண் தெரியாமல் போதல், ஒரு காது கேட்காமல் போதல் போன்ற சந்தர்ப்பங்களில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் முதல் இரண்டு இலட்சம் வரை காப்புறுதித் தொகை வழங்கப்படுகிறது.

தற்காலிக அங்கவீனம்

விபத்துகளின் மூலம் தற்காலிகமாக அங்கவீனம் அடைந்து (அதாவது, கை, கால் உடைந்து) பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியரிடம் வைத்தியம் செய்து கொண்டு வீட்டில் இருந்தாலும் இரண்டு வாரம் முதல் ஒரு மாதம் வரையான காலத்துக்கு ரூபாய் 25,000.00 உம், ஒரு மாதம் முதல் இரண்டு மாதம் வரை ரூபாய் 50,000.00 உம், இரண்டு மாதத்துக்கு மேற்பட்ட காலத்துக்கு ரூபாய் 100,000.00 ஐயும் காப்புறுதி வழங்கப்படுகிறது.

### தாய், தந்தையின் இறப்பு

தாய், தந்தை இறக்கின்ற நிலையில், அக்குடும்பத்தின் வருமானம் வருடாந்தம் ரூபா 180,000.00 ஐ விடக் குறைவாக இருந்தால், (வருமானத்தை கிராம சேவகரும், பிரதேச செயலாளரும் உறுதிப்படுத்த வேண்டும்) பாடசாலையில் கற்கும் ஒரு பிள்ளைக்கு, இரண்டு இலட்சம் ரூபாய் வீதம், மொத்தமாக ஆறு இலட்சம் வரை காப்புறுதி வழங்கப்படுகிறது. பிள்ளையின் வங்கிக் கணக்குக்கு தொகை அனுப்பப்படும்.

பிள்ளையின் மரணத்தின்போது, எந்தவோர் இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்படமாட்டாது.

### குறிப்புகள்:

எந்த ஒரு நிகழ்வின் பின்னரும் 90 நாள்களுக்குள் இது தொடர்பான அனைத்துப் படிவங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 90 நாள்கள் கடந்த எந்தப் படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இது போன்ற நிகழ்வுகளின் போது, பாடசாலையிலிருந்து இதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, முழுமையாக நிரப்பி, அதில் குறிப்பிடப்படும் அனைத்து ஆவணங்களையும் சேர்த்து, வகுப்பாசிரியர், அதிபர் அத்தாட்சிப்படுத்தியதன் பின்பு, அருகிலுள்ள ஸ்ரீ லங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபன காரியாலயத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

மாறாக, கோட்டக்கல்வி காரியாலயத்துக்கு அல்லது வலயக் கல்வி காரியாலயத்துக்கு அல்லது கல்வி அமைச்சுக்கு இவற்றை அனுப்பக்கூடாது.

கல்வி அமைச்சின் 2019.04.11ஆம் திகதிம் 24/2019 இலக்கமும் கொண்ட சுற்றறிக்கையை செல்லுபடியற்ற தாக்கி வெளியிடப்பட்ட 2021.03.01 திகதியும் 04/2021 இலக்கமும் கொண்ட சுற்றறிக்கையை அடிப்படையாக வைத்து, இது தொகுக்கப்பட்டது. 2020.12.02 முதல் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது)




'ஒரே நாடு, ஒரே சட்டம்'

# செயலணியை இல்லாதொழிக்கவும்

### ஐ.தே.க ஜனாதிபதியிடம் கோரிக்கை

நாட்டின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற செயலணியை இல்லாதொழிக்குமாறு ஐக்கிய தேசிய கட்சி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுபல சேனா அமைப்பின் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான ஜனாதிபதி செயலணியானது, தேசிய ஒற்றுமையை சீர்குலைத்து வருவதாக ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு நேற்று ஞாயிற்றுக்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எந்தவொரு புதிய சட்டமும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும். அதன் பின்னர், நீதி அமைச்சின் குறிப்பாக, சட்டமா அதிபரின் உதவியுடன் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி செயலணியில் தங்கியிருக்காமல், விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அல்லது சட்டமா அதிபர், ஜனாதிபதியிடம் ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

செயலணியொன்றை நியமித்து, அமைச்சரவையில் விவாதிக்காமல், நீதி அமைச்சர், சட்டமா அதிபரின் அதிகார வரம்பில் இருந்து நீக்கும் நடவடிக்கை கேலிக்குரியது. அரசியலமைப்புக்கு முரணான ஜனாதிபதியின் செயல் என ஐ.தே.கட்சி அதன் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

எனவே, நாட்டின் ஒற்றுமைக்கு பாதகமான 'ஒரே நாடு, ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணியை உடனடியாக இல்லாதொழிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோருகின்றோம் என ஐ.தே.க அறிக்கை மூலம் கோரிக்கைவிடுத்துள்ளது.

வரவு செலவுத் திட்டம்

# வேலையில்லா திண்டாட்டத்தைக் குறைக்கும்



எதிர்வரும் வரவு செலவுத் திட்டம், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்குமென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டம் பற்றி, அஸ்கிரிய மற்றும் மல்வத்து மகாநாயக்க தேரர்களை நேரில் சென்று பார்வையிட்டதன் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கருத்து தெரிவிக்கையில், உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பொதுமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு புதிய ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாரிய தொகை ஒதுக்கப்படும்.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், அடுத்த வருடத்தில் பல வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம், வேலை வாய்ப்புகள் கூடுதலாக உருவாகும். பொது நலச் செயற்பாடுகளை அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் கூறினார்.

கொரோனா அபாய நிலை குறைவதால், இலங்கையில் பல முதலீட்டுத் திட்டங்களை ஆரம்பிக்க, ஐக்கிய இராச்சியத்தில் உள்ளோர் இணங்கியுள்ளனர் என, அஸ்கிரிய, மல்வத்து மகாநாயக்க தேரர்களிடம் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதியின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்றன



தேசிய மற்றும் உலகளாவிய ரீதியில் 'சுபீட்சத்தின் பார்வை' கொள்கை விஞ்ஞாபனத்தில், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருவதாக கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் தெரிவிக்கையில்,

"நாட்டின் பௌதீக வளங்களின் அபிவிருத்தியின் கீழ் வீதி அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது. ஏனெனில் இதன் ஊடாக நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை இலகுபடுத்துவதற்கு கிராமிய வீதி வலையமைப்பு வலுப்படுத்தப்பட வேண்டும்.

2015ஆம் ஆண்டுக்குப் பிறகு, நெடுஞ்சாலை அமைப்பு வளர்ச்சி இல்லை. நல்லாட்சியின் நான்கரை வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், கிராமிய மக்கள் தமது உற்பத்திப் பொருட்களை பொருளாதார நிலையத்துக்கும், தமது பணியிடத்துக்கும், தொழிற்சாலைக்கும், பாடசாலைகளுக்கும் கொண்டு செல்வதற்கு வசதியாக கிராம வீதியை அபிவிருத்தி செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களின் பயிர்களுக்கு அதிக விலை கிடைக்கும் .

அதன்படி 100,000 கிலோ மீற்றர் வீதி அபிவிருத்திக்கான தேசிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை நல்லாட்சி துரிதப்படுத்தியது. மீரிகம, குருநாகல் பகுதி மற்றும் புதிய களனி பாலங்கள், அதனுடன் தொடர்புடைய அதிவேக நெடுஞ்சாலை வலையமைப்பை விரைவில் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ருவன்புர அதிவேக நெடுஞ்சாலை, களனி முதல் அத்துருகிரிய அதிவேக நெடுஞ்சாலை வரையிலான புதிய பாலத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார்.

**விஷேட அட்டோர்ணித் தத்துவத்தை மீளப்பெறல்**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசில் உள்ள இலக்கம் 103C, நீர்கொழும்பு வீதி, கட்டுவெல்லேகம எனும் முகவரியைச் சேர்ந்த கல்யாண பிரசன்ன பண்டா ஒபயசேகர (தேசிய அடையாள அட்டை அலக்கம் 195722700475) மற்றும் நதீரா தமயந்தி ஒபயசேகர (தேசிய அடையாள அட்டை அலக்கம் 196370803252) ஆகிய நாங்கள் இருவரும் கொழும்பைச் சேர்ந்த ஹெட்டி ஆராச்சிலாகே புத்தி அசின்டியா ரணசிங்க எனும் பிரசித்த நொத்தாரஸ் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு, இலக்கம் 02, நைனமடம கிழக்கு, நைனமடம (Nainamaadama) எனும் முகவரியைச் சேர்ந்த டொன் ஆன் ஷனிக்க நிரோஷினி ஹலஹக்கோன் (தேசிய அடையாள அட்டை அலக்கம் 797161810V) அவர்களுக்கு வழங்கப்பட்ட 2020.02.26 ஆம் திகதியிடப்பட்ட 285A எனும் இலக்கம் கொண்ட விஷேட அட்டோர்ணித் தத்துவம் இத்தால் திரும்பப்பெறப்பட்டு இரத்துசெய்யப்பட்டு, இல்லாதொழிக்கப்படுகின்றதென்பதைப் பொது மக்களுக்கும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கத்திற்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

05.11.2021

கல்யாண பிரசன்ன பண்டா ஒபயசேகர
நதீரா தமயந்தி ஒபயசேகர

LK Newspapers Viber Community

போக்குவரத்துச் சபையை

# மேம்படுத்த நடவடிக்கை

■ வரின்பராஜா சபேஷ் , எம்.எம்.அஹமட் அனாம்

அடுத்த ஒரு வருட காலத்துக்குள் போக்குவரத்துச் சபையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையில் ஐந்து வருட காலம் பணியாற்றியுள்ள ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவும் ஏனைய ஊழியர்களுக்கான சம்பள முரண்பாடுகளை நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், க.பொ.த சாதாரண தர கல்வித் தகைமையற்ற ஊழியர்களுக்கு என்.வீ.கியு தகைமையை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.



மட்டக்களப்பு, ஏறாவூர் போக்குவரத்துச் சாலையில் அமைக்கப்பட்டுள்ள உள்ளக வீதி திறப்பு விழா, நேற்று முன்தினம் (06) நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் மேலும் உரையாற்றுகையில், "எமது நாட்டிலுள்ள மின்சார சபை, நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை போன்ற சபைகள் மேம்பட்ட நிலையில் இயங்குகின்றபோதிலும் போக்குவரத்துச் சபை மாத்திரம் கீழ் மட்டத்தில் காணப்படுகிறது.

"எனவே, அடுத்த ஒரு வருட காலத்துக்குள் போக்குவரத்துச் சபையையும் மேம்பட்ட நிலைக்குக்கொண்டு வருவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

"விசேடமாக போக்குவரத்துச் சாலைகளுக்கான சட்ட திட்டங்கள் உருவாக்கப்படும்போது, சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய வகையில் அமைய வேண்டுமெனக் கேட்டுள்ளேன்.

"அதேபோல, புகை பரிசோதிக்கும் தற்போதைய முறையை மாற்றி, புதிய முறையொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது" என்றார்.

சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு

# தீயாக உழைக்கும் அங்கஜன்

■ எஸ். நிதர்ஷன்

தமிழரின் பாரம்பரிய நிலங்களில் சிங்கள பௌத்த மயமாக்கலை மேற்கொள்வதற்கு, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தீவிரமாக வேலை செய்கின்றார் என, வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், கோட்டாபய அரசாங்கம் அத்தியாவசிய பொருள்களின் விலைகளை இரண்டு, மூன்று மடங்காக அதிகரித்து, மக்களின் வாழ்வாதாரத்தை கேள்விக்குட்படுத்தி உள்ள நிலையில், சிங்கள மக்களின் கடும் எதிர்ப்பைச் சமாளிப்பதற்கும் மக்களைத் திசை திருப்புவதற்கும் 'தனி பௌத்த சிங்களம்' என்ற கோட்பாட்டை கையில் எடுத்துள்ளது.

அதிலொரு பகுதியாகத்தான் தேசிய மரபுரிமைகள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, வடக்கில் முகாமிட்டு, தமிழர்களின் பூர்வீக நிலங்களில் சிங்கள பௌத்த சின்னங்கள் உள்ளதாக அடையாளப்படுத்த முற்படுகின்றார்.

அதற்கு, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், தீவிரமாக வேலை செய்வது வெட்கக்கேடானது. இந்த அரசாங்கத்தின் முக்கிய அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட, சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு துணை போகக்கூடாது என்றுதான் இந்த விடயங்களில் பங்கெடுக்காமல் பின்நிற்கின்றார்.



ஆனால், அங்கஜன் இராமநாதன் எமது மக்களை முட்டாள்கள் என நினைத்து, இவ்வாறான செயல்களை செய்வதொன்றும் வேடிக்கையான விடயமல்ல.

அவர் தனது வியாபாரத்துக்காக தனது மக்களை மட்டுமல்ல, தமிழர்களின் அடையாளங்களைக் கூட மாற்றுவதற்கு, துணைபோவார் என்பது சாதாரணமானது.

எனவே, எமது மக்கள் தமது பூர்வீக நிலங்களை விட்டுக்கொடுக்க கூடாது என்று, காரைநகரில் துணிவுடன் செயற்பட்டது போன்று, அனைத்து மக்களும் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் பா.கஜதீபன் தெரிவித்தார்.

## பலத்த மழையிலும் கசிப்பு உற்பத்தி

### மூவர் தப்பியோட்டம்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் (06) இரவு பாரிய கசிப்பு உற்பத்தி நிலையம் சுற்றிவளைக்கப்பட்டதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார். இரவு எட்டு மணியளவில் பலத்த மழைக்கு மத்தியில், கொக்கொட்டிச்சோலை சந்திமலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்தப் பாரிய கசிப்பு உற்பத்தி நிலைய முற்றுகையின் போது 135,000 மில்லி லீற்றர் கசிப்பு 630,000 மில்லி லீற்றர் கோடா மற்றும் இரு பரல்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தக் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடத்தி வந்த மூவர், அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். அவர்களைக் கைது செய்யயும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தார்.





## இது நம்ம ஊரு



அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, நிந்தவூர், காரைதீவு பகுதிகளை தினமும் மாலை வேளைகளில் யானை கூட்டம் ஆக்கிரமித்து வருகின்றது.
பெரிய யானைகள் மற்றும் குட்டிகள் என சுமார் 100 க்கும் அதிகமான யானைகள் அப்பகுதிகளில் உள்ள அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களை நோக்கிப் படையெடுக்கின்றன.
அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களில் உள்ள வைக்கோல்களுக்கு தீ வைப்பதால், ஊருக்குள் சென்று யானைகள் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.
(படங்கள்: பாறுக் ஷிஹான்)

புதுக்குடியிருப்பில்

## புதையல் தோண்ட வந்த மூவர் கைது

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு நகர் பகுதியில், நேற்று முன்தினம் (06) இரவு, புதையல் தோண்ட வந்த மூவர், சந்தேகத்தின் பேரில், புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நீர்கொழும்பு, அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவர்கள், புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய நிலையில் கைதுசெய்யப்பட்டு, விசாரித்த போது, புதையல் தோண்ட வந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## வாள்வெட்டில் இளைஞன் படுகாயம்

■ எஸ். நிதர்ஷன்

கொக்குவில், கேணியடிப் பகுதியில், நேற்று முன்தினம் (06) இரவு 8 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில், இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த இளைஞன், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில், குறித்த பகுதியைச் சேர்ந்த உதயகுமார் ரதீபன் என்ற இளைஞனே, இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த 3 பேர், இவ்விளைஞன் மீது வாள்வெட்டை நடத்திவிட்டு, அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





## மருத்துவ முகாம்...

மன்னார், மடு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சின்ன வலயன்கட்டு பகுதியில் உள்ள மக்களின் சுகாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு, மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனுசரணையுடன், சின்ன வலயன்கட்டு பொது நோக்கு மண்டபத்தில், சனிக்கிழமை (06) காலை முதல் மாலை வரை, மருத்துவ முகாமொன்று நடைபெற்றது. (படப்பிடிப்பு: எஸ். றொசேரியன் லெம்பேட்)

## வேலுப்பிள்ளை சிவயோகன் காலமானர்

■ எஸ். நிதர்ஷன்



துன்னாலை மத்தி கரவெட்டியை சேர்ந்த வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் வேலுப்பிள்ளை சிவயோகன் காலமானர்.

இவர், தமிழரசு கட்சியின் உடுப்பிட்டி கிளையின் செயலாளருமாவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள், இன்று (08) காலை 10.30 மணியளவில், துன்னாலை, கோவிற்கடவையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

வருடாந்த ஆசிரியர்

## இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்

■ எம்.எஸ்.எம். ஹனீபா



கிழக்கு மாகாணத்தில் வலயங்களுக்கு இடையிலான 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்துக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி என். புள்ளநாயகம், நேற்று (07) தெரிவித்தார்.

இது தொடர்பான சுற்றுநிருபம் மாகாணத்திலுள்ள சகல வலய கல்வி பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒரு வலயத்திலிருந்து இன்னுமொரு வலயத்திற்கு தனது விருப்பத்தின் பேரில் இடமாற்றம் பெற விரும்புகின்ற ஆசிரியர்கள், தமது வலயத்துக்கென வலய இடமாற்ற அதிகாரிகளால் தீர்மானிக்கப்படுகின்ற அதிகூடிய சேவைக் காலத்தை விட கடமை புரிகின்ற ஆசிரியர்கள், முதல் நியமன வலயத்தில் நியமனக் கடிதத்தின்படி கட்டாய சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள், நியமனக் கடிதத்தில் கட்டாய சேவைக் காலம் குறிப்பிட்டிருக்காவிட்டால் முதல் நியமனத்திலிருந்து 05 வருட கால சேவையை அவ்வலயத்தில் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவுள்ளன.

www.ep.gov.lk/en/depteduindex எனும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள், இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார்.

## குடும்பத்தில் மூன்றாவது நபரும் கொரோனாவுக்கு மரணம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த நிலையில், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஏறாவூரைச் சேர்ந்த 52 வயதுடைய நபர், கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு மரணமடைந்துள்ளார்

காய்ச்சல் ஏற்பட்டிருந்த நிலையில், ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது, கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதிசெய்யப்பட்டது.

இதையடுத்து இவர் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டு, அங்கு அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், வெள்ளிக்கிழமை நள்ளிரவு மரணமடைந்துள்ளார்

இந்நிலையில், அவரது குடும்பத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சைப்பெற்று வந்த, அவரது சகோதரிகள் இருவரும், மரணமடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மன்னாரில் கடும் மழை:

## விடத்தல் தீவுக்குள் புகுந்த கடல் நீர்

### மக்கள் பாதிப்பு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



மன்னார் மாவட்டத்தில், தொடர்ச்சியாக மழை பெய்து வந்த நிலையில், நேற்று (7) அதிகாலை, மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கிராமத்துக்குள் கடல் நீர் புகுந்துள்ளது.

இதனால் விடத்தல் தீவு கிராமத்தின் மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

மேலும், விடத்தல் தீவு மீனவர்களின் படகுகள் சில சேதமடைந்துள்ளன எனவும், மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நேற்று (7) காலை விடத்தல் தீவு கிராமத்துக்குச் சென்று, நிலைமையை அவதானித்ததோடு, பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்தார்.

மேலும், உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு வினவியதோடு, உரிய கிராம அலுவலரை சந்தித்து பாதிப்பு தொடர்பாக அறிந்துகொண்டார்.

அத்துடன், தலைமன்னார் கிராம பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் தொடர்பாகவும் நேரடியாக சென்று நிலைமையை அவதானித்தார்.





பழையமுறிகண்டியில்

## நாள்தோறும் மணல் அகழ்வு

■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு, பழையமுறிகண்டி கிராமத்தில் நாள்தோறும் வெளியிடங்களுக்கு மணல் கொண்டு செல்லப்படுவதாக, துணுக்காய் பிரதேச சபை உறுப்பினர் கந்தசாமி சகுந்தலாதேவி தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்துரைத்த அவர், கடந்த பத்து ஆண்டுகளாக மணல் கொண்டு செல்லப்படுகிறது. இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர், துணுக்காய் பிரதேச செயலாளர் உட்பட பல்வேறு தரப்புகளுக்கு தகவல்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும் உரிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆற்றுப்படுகைகளில் தொடர்கின்ற மணல் அகழ்வு பழையமுறிகண்டி குளத்தின் அணைக்கட்டுக்கு அருகாமையில் நிகழ்வதால் குளத்தின் அணைக்கட்டு உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்படலாம் என, மக்கள் தெரிவிக்கின்றனர் என்றார்.

பதவி நிலை

# உத்தியோகத்தர் பற்றாக்குறை

### பணிகள் மந்தம்

■ அஸ்லம் எஸ்.மௌலானா



கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் பதவி நிலை உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காரணமாக, வேலைகள் மிகவும் மந்த கதியில் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டியுள்ள தென்கிழக்கு கல்விப் பேரவை, இது குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளதாக பேரவையின் தலைவர் ஏ.எல்.எம். முக்தார், நேற்று (07) தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் செயலாளரைத் தவிர, சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவரும் உதவிச் செயலாளர்கள் இருவரும் கடமையில் இருக்க வேண்டும். ஆனால், தற்போது இந்த அமைச்சில் ஒரு சிரேஷ்ட உதவிச் செயலாளரும் ஓர் உதவிச் செயலாளரும் ஒரு பதில் உதவிச் செயலாளரும் கடமையில் உள்ளனர்.

"நிர்வாக ஏற்பாடுகளுக்கமைய ஒரு விடயம் உதவிச் செயலாளர் ஊடாக சிரேஷ்ட உதவி செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் செயலாளருக்கு இறுதி ஒப்பத்துக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஆனால், தற்போதைய சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒரு சட்டத்தரணி என்பதால், கல்வி அமைச்சு சார்பில் நீதிமன்றம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றில் ஆஜராகி வருகிறார். அதேவேளை, கடமையில் உள்ள ஓர் உதவிச் செயலாளர் அமைச்சுக்கு சமூகமளிப்பதில் அக்கறையின்றி உள்ளார். இந்த நிலையில், கல்வி அமைச்சின் பணிகள் யாவும் மந்த கதியில் இடம்பெற்று வருகின்றன" என்றார்.

Lk Newspapers Virtual community

### தமிழ் முற்போக்கு கூட்டணியால்

# பொகவந்தலாவையில் போராட்டம்

■ எஸ்.கணேசன்

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தைக் கண்டித்தும், வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வலியுறுத்தியும் தமிழ் முற்போக்கு கூட்டணியால் நேற்றைய தினமும் (07) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

பொகவந்தலாவை நகரில், முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமான இப்போராட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வீ. இராதாகிருஷ்ணன், பாராளுமன்ற உறுப்பினர்களான வேலுகுமார், உதயகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

அத்துடன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் போராட்டத்தில் பங்கேற்று, விலையேற்றத்தைக் கண்டித்தனர்.



இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, பொகவந்தலாவை நகரில் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

"அத்தியாவசியப் பொருட்களின் விலையை உடனடியாகக் குறைக்கவும். வரவு - செலவுத் திட்டத்தில் நிவாரணம் வேண்டும். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஊதிய உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவர்களின் தொழில் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் உரம் வழங்க வேண்டும். அதற்கான விசேட பொறிமுறை அவசியம்" எனவும் போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

# டெங்குவால் பதுளை மாணவன் பலி

■ பாலித ஆரியவன்ச

பதுளை, ஊவா மகா வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி கற்கும் 10 வயது மாணவன் டெங்கு நோயின் காரணமாக உயிரிழந்துள்ளார் என, பதுளை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

பதுளையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இந்த நாள்களில் அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்கந்த, ஹிந்தகொட, பதுலுப்பிட்டிய போன்ற இடங்களில் இருந்து பெரும்பாலான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



நேற்றையதினம் வரை கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், பதுளை பொது வைத்தியசாலையில் 25 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர்.

இதேவேளை, பதுளை மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் டெங்கு பரவும் இடங்களில் பரிசோதனைகளை மேற்கொண்டு வருவதாக பொது சுகாதார பரிசோதகர் ரணில் பிரியங்கர தெரிவித்தார்.

அண்மையில், கல்கந்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, நுளம்புகள் உற்பத்தியாகும் எட்டு இடங்கள் இனங்காணப்பட்டு, குடியிருப்பாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.



# சீரற்ற வானிலையை பொருட்படுத்தாமல்...

சுகாதார ஆலோசனைக்கு அமைய நீண்டகாலமாக மூடப்பட்ட தரம் 5க்கு மேற்பட்ட சகல பாடசாலைகளையும் மீளத் திறப்பதற்கு கல்வி அமைச்சு மேற்கொண்ட தீர்மானத்தின்படி, தோட்டப் பகுதிகள் மற்றும் நகர்ப்புற பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர், சீரற்ற வானிலையையும் பொருட்படுத்தாது பாடசாலைகளை, நேற்றையதினம் (07) துப்புரவு செய்தனர். (படம்: ரஞ்சித் ராஜபக்ஷ)

# கந்தப்பளையில் வெள்ளம்; தடுப்பதற்கு நடவடிக்கை

■ பி.கேதீஸ்

நுவரெலியா பிரதேச சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட கந்தப்பளை பிரதேசத்தில், கடந்த இரண்டு வாரங்களாக மாலை வேளையில் தொடர்ந்து பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக்கு பிரதான காரணமாக, கந்தப்பளை பகுதியில் தற்பொழுது மேற்கொள்ளப்படும் வீதி அபிவிருத்தி திருத்த வேலைகளே காரணம் என கந்தப்பளை நகர வர்த்தகர்களும் பொது மக்களும் தெரிவிக்கின்றனர். கந்தப்பளை நகர வர்த்தகர்களும் பொது மக்களும் சம்பந்தப்பட்ட விடயத்தை நுவரெலியா பிரதேச சபையின் தவிசாளர் வேலு யோகராஜின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

அதையடுத்து, நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜ் தலைமையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர்கள், கந்தப்பளை வீதி திருத்த ஒப்பந்ததாரர்கள், திட்ட முகாமையாளர்கள் ஆகியோர் கந்தப்பளை நகரில் வெள்ளப்பெருக்கு ஏற்படாத வகையில் முறையாக வேலைத்திட்டங்களை அமல்படுத்துவதற்கு வெளிக்கள விஜயமொன்றை நேற்று (07) மேற்கொண்டனர்.



# கோழிக் கூட்டுக்குள் சிக்கிய சிறுத்தை



■ எஸ்.கிருஸ்ணா, ரஞ்சித் ராஜபக்ஷ

கோழிக் கூடொன்றுக்குள் சிக்கிய சிறுத்தையொன்றை, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் பணிப்புரையின் பேரில் தோட்ட தொழிலாளர்கள் குழுவொன்று விடுவித்துள்ளது.

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட டிக்கோயா ஹாட்லி தோட்டத்திலுள்ள தோட்ட வீடொன்றில் வளர்த்து வந்த கோழிகளை வேட்டையாடுவதற்காக வெள்ளிக்கிழமை (05) இரவு கோழிக் கூட்டின் தரைத் தளத்துக்குள் சிறுத்தை நுழைந்துள்ளது.

கூட்டுக்குள் சிறுத்தை சிக்கிக் கொண்ட சம்பவம் தொடர்பில், நல்லதண்ணி வனஜீவராசிகள் அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டது.

அதற்கமைய, வனவிலங்கு அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் சிறுத்தை சிக்கியிருந்த கோழிக் கூட்டின் கதவை திறந்ததையடுத்து, சிறுத்தை அவ்விடத்தை விட்டு ஓடியுள்ளது.

நன்கு வளர்ந்த சிறுத்தைகள் தேயிலைத் தோட்டத்தில் நடமாடுவதாகவும், இரவு நேரங்களில் வீடுகளுக்கு அருகில் வந்து நாய், கோழிகளை வேட்டையாடுவதாகவும் தோட்டத் தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### கடும் மழையால் பல வீதிகளில்

# போக்குவரத்துத் தடை

## அவதானமாகப் பயணிக்குமாறு எச்சரிக்கை

■ எம்.தஸ்ஹசனர்

மலையகத்தில், அண்மைக் காலமாக பெய்து வரும் அடைமழை காரணமாக, பல வீதிகளில் மண் சரிவு ஏற்பட்டுள்ளதாலும் பாரிய மரங்களும் கற்பாறைகளும் விழுந்துள்ளதாலும் வீதிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, பதுளை மாவட்டத்தில் நுவரெலியா - வெலிமடை வீதியின் பொறகஸ் பிரதேசத்தில் மண் சரிவு ஏற்பட்டுள்ள அதேவேளை, எல்ல - வெல்லவாய வீதி, தெமோதர - ஸ்பிரிங்வெலி போன்ற வீதிகளில் ஆங்காங்கு மண்சரிவு ஏற்பட்டு வருவதால் வீதி போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்து உள்ளதாக வீதிப் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

பசறை, கணவரல்ல தோட்டத்தில் ஏற்பட்ட மண் சரிவால், அங்குள்ள லயம் மீது பாரிய மண் மேடு



சரிந்துள்ளது. அத்துடன், வீதிப் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

இதையடுத்து, பசறைப் பிரதேச செயலகம், பிரதேச சபை ஆகியவை பெக்கோ இயந்திரம் மூலம் அவற்றை அகற்றி வருகின்றனர்.

இதேபோன்று, எல்ல-வெல்லவாய வீதியில் பாரிய கற்பாறைகள் விழுந்ததில், வீதிப் போக்கு வரத்து தடைப்பட்டதால் எல்ல பிரதேச சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், வீதியை ஒரு வழிப் போக்குவரத்துக்கு மாத்திரம் செப்பனிட்டுள்ளனர்.

# அரசாங்கத்தின் மீது மக்கள் அதிருப்தி

## சிறிது காலம் பொறுமை காக்கவும் என்கிறார் ஜீவன்

■ எஸ்.கணேசன்

"இந்த அரசாங்கத்தின் மீது மக்கள் தற்போது கடும் அதிருப்தியில் உள்ளனர். இன்னும் சிறிது காலம் பொறுமையாக இருங்கள். நிலைமை சீர்செய்யப்படும். என்றும் நாங்கள் உங்களுடன் இருப்போம்" என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொட்டகலை பிரதேச சபைக்கு உட்பட்ட கிறிஸ்லஸ்பாம் - கே.ஜி.கே வரையான 4.45 கிலோமீற்றர் வீதி, கார்பெட் இடப்பட்டு மக்கள் பாவனைக்கு நேற்று (07) கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது,



"பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மேம்படுத்தப்பட வேண்டும். வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும். இவ்விரண்டு விடயங்களையும் சிறப்பாக செய்து முடித்தால் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் தானாகவே நடக்கும்.

நன்றி மறக்கக்கூடாது என அனுசியா அம்மையார் குறிப்பிட்டார். எனவே, நெருக்கடியான கால கட்டத்திலும் வீதி புனரமைப்பு பணியில் ஈடுபட்ட வீதி அபிவிருத்தி சபை அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொருட்களின் விலையேற்றத்தால் மக்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் அரசாங்கத்தின் மீது அதிருப்தியில் உள்ளனர். இங்கு மட்டுமல்ல உலக நாடுகளிலும் இந்நிலைமை நீடிக்கின்றது. எனவே, பொறுமை காக்கவும். இன்னும் ஒரு வருடத்துக்குள் நிலைமை சீர் செய்யப்படும்" என்றார்.

# ஓட்டோக்களுக்கு 'கியூஆர்' ஸ்டிக்கர்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களமும் இலங்கை பொலிஸ் திணைக்களமும் இணைந்து, ஓட்டோக்களுக்கான 'கியூஆர்' (QR) குறியீடு கொண்ட புதிய ஸ்டிக்கர் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளன.

அதன் அடிப்படையில், நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டோக்களுக்கு நாவலப்பிட்டி பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினரால், நேற்று முன்தினம் (06) புதிய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

இந்தக் 'கியூஆர்' குறியீடு கொண்ட ஸ்டிக்கரில், ஓட்டோ வண்டி உட்பட ஓட்டோ வண்டியின் உரிமையாளரின் அனைத்து தரவுகளும் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்துக்கும்



வழங்கப்பட்டுள்ள திறன்பேசி மென்பொருளைக் கொண்டு, 'கியூஆர்' குறியீட்டைச் சரிபார்க்கும் போது, ஓட்டோ வண்டியை பரிசோதிக்கும் பொலிஸ் அதிகாரி, ஓட்டோ வண்டியின் விரிவான விவரங்களைப் பெறமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து பொலிஸ் நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் 'கியூஆர்' குறியீடு கொண்ட ஸ்டிக்கர் அச்சிடப்பட்டு, குறிப்பிட்ட பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து ஓட்டோக்களிலும் தொடர்புடைய ஸ்டிக்கர் ஒட்டப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவில், நேற்று முன்தினம் (06) குறித்த ஸ்டிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டதாக நாவலப்பிட்டி பொலிஸ் போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

'கியூஆர்' குறியீடு கொண்ட ஸ்டிக்கர் ஒட்டுவதன் மூலம், ஓட்டோக்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் குற்றங்களைத் தடுக்கவும் ஓட்டோக்கள் திருடப்படுவதைக் கட்டுப்படுத்தவும் முடியும்.

# நூரளையின் தாழ்நிலங்களில் வெள்ளம்

## மாவட்ட செயலகத்தில் விசேட கூட்டம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

நுவரெலியா மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட தாழ்வான பகுதிகளில் உள்ள கடைகள், வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியமை தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுப்பதற்காக, அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விசேட கூட்டம் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் (06) இடம்பெற்றது.

வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்நாயக்க, நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட ஆகியோரின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் அண்மையில் பெய்த கடும் மழையின் காரணமாக நுவரெலியாவில் இருந்து கிரெகரி ஏரி வரை தலகல ஓயா நிரம்பி



வழிவதால், ஏராளமான கடைகள், வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியமை குறித்து கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது. தலகல ஓயா நிரம்பி வழிவதைத் தடுப்பதற்காக கால்வாயின் இருபுறமும் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களை அகற்றி, நீண்ட கால திட்டமாக தலகல ஓயாவை அகலப்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது.

Newspapers Viber Community

# மீண்டுமோர் அபாய எச்சரிக்கை குறித்து விழிப்பாக இருப்போம்

பாடசாலைகள் பகுதி, பகுதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகள் முற்றாக நீக்கப்பட்டு, பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒருசிறு பிரிவுகளைத் தவிர, ஏனையவை இயங்குகின்றன. இந்நிலையில், மீண்டுமொரு முடக்கத்துக்கான அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், அதுகுறித்து விழிப்பாக இருக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

சுமார் ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர், பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மிகவும் உத்வேகத்துடனும் உணர்வுடனும் பாடசாலைகளுக்குச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

ஒவ்வொரு வீடுகளிலும் காலைநேர சுறுசுறுப்புகள் களைகட்டியுள்ளன. சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களைத் தவிர, ஏனைய நாள்களில் காலைவேளையில் எவ்வாறு வீடுகள் இயங்குமோ, அந்த இயக்கத்துக்குள் திரும்பியிருக்கிறது.

இந்நிலையிலேயே, கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாயின், மீண்டுமொரு முடக்கத்துக்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்படலாமென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த எச்சரிக்கையை கணக்கிலெடுக்காது விட்டுவிடக்கூடாது; அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை நசுக்குவதற்கான ஒரு துருப்புச் சீட்டாக, இந்த எச்சரிக்கையை கையிலெடுத்துவிடக்கூடாது.

கொரோனா முடக்க காலத்தில், வாய், வயிற்றைக் கட்டிக்கொண்டிருந்த நிலையில், தலைநிமிர முடியாத அளவுக்கு பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. பொருட்களின் தட்டுப்பாடு ஒருபக்கம், பதுக்கல் வியாபாரம் மற்றொரு பக்கமென நாலாபுறங்களில் இருந்தும் தொடுக்கப்படும் தாக்குதல்களுக்குள் மக்கள் இருக்கின்றனர்.

நிர்மாணப்பணிகள் இடம்பெறும் இடங்களில் சிலவற்றின் வாயில்களில், 'வேலைக்கு ஆட்கள் தேவையில்லை' என அறிவித்தல்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. கிடைக்கும் வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் நிலையில், மீண்டுமொரு முடக்கத்துக்குச் சென்று, மக்களின் இயல்பு வாழ்க்கையை சீர்குலைத்துவிடக்கூடாது.

ஆகையால், கொரோனாவின் முதல், இரண்டாம் அலைகளின் போது, எவ்வாறு சுகாதார வழிமுறைகளைக் கையாண்டோமோ, அதைவிடவும் இறுக்கமான நடைமுறைகளை கடைப்பிடிப்பதே அனைவருக்கும் நன்மை பயக்கும்.

பாடசாலைகள் திறக்கப்படுகின்றன என்பதால், ஒவ்வொரு மாணவனும் எவ்வாறான சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பது தொடர்பில், வீட்டிலிருந்தே சொல்லிக்கொடுக்க வேண்டும். பாடசாலைகளைப் பொறுத்தமட்டில், கற்பிப்பதைத் தவிர, ஏனைய இணைப்பாட விதான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நேரகாலம் போதாமல் இருக்கிறது.

கடந்தகாலங்களில் விட்டுச் சென்ற பாடங்கள் மீதும் கவனம் செலுத்தவேண்டும் என்பதால், இணைப் பாடவிதான செயற்பாடுகளை பாடசாலைகளில் எதிர்ப்பார்க்க முடியாது. இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு, ஒவ்வொருவரும் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் ஊடாகவே, மீண்டுமோர் முடக்கத்துக்கு செல்வதிலிருந்து தவிர்த்துக்கொள்ளலாம் என்பதே எமது வலியுறுத்தலாகும்.




# தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு. கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







என்.கே. அஷோக்பரன்

# இன-மத தேசியவாதத்திடம் சரண் புகுதல்

அயோக்கியனின் கடைசி சரணாலயம் 'தேசப்பற்று' என்று சாமுவேல் ஜோன்சன் குறிப்பிட்டிருந்தார். இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில், 'தேசப்பற்று' என்பது, இன-மத தேசியவாதத்தின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டு உள்ளமையால், 'இன-மத தேசியவாதமே' அயோக்கியர்களின் கடைசி சரணாலயமாக இருப்பதை அவதானிக்கலாம்.

அரசியலில் மற்ற எல்லா அஸ்திரங்களும் பயன்தராத போது, இலங்கை அரசியல்வாதிகள் கையில் எடுக்கிற அஸ்திரம், 'இன-மத தேசியவாதம்' ஆகும். 'குழு' அல்லது 'குழு இணைப்பு' என்று புரிந்து கொள்ளப்படும் குழுநிலைவாதம் (tribalism), மனித உளவியலில் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு விடயமாகும்.

மற்ற விலங்குகளைப் போலவே, மனிதர்களும் குழு உணர்வுடைய விலங்குகள். மனிதர்கள் குழுக்களைச் சேர்ந்தவராக இருக்கவே விரும்புகிறார்கள், அதனால்தான், நாங்கள் கழகங்களையும் அணிகளையும் கட்சிகளையும் விரும்புகிறோம்; ஆதரிக்கிறோம்.

மக்கள் ஒரு குழுவுடன் இணைந்தவுடன், அதன் அடையாளங்கள், அவர்களுடன் வலுவாகப் பிணைக்கப்படும். அவர்கள் தனிப்பட்ட முறையில் எதையும் பெறாதபோதும், தங்கள் குழுவின் உறுப்பினர்களுக்கு நன்மை செய்ய முயல்வார்கள். தமது குழு அல்லாதவர்களை, அந்நியர்களாகவே அடையாளம் காண்பார்கள். அந்நியர்கள் மீதான சந்தேகம், அச்சம், விரோதம், குரோதம் என்பன ஏற்படும். மனிதர்கள் தங்கள் குழுவுக்காகத் தியாகம் செய்வார்கள்; மற்றவர்களைக் கொல்வார்கள்; தாமும் சாவார்கள்.

அனைவருக்கும், எல்லா இடங்களிலும், குழுநிலைவாத உள்ளுணர்வும் தாம் ஒரு குழுவுக்கு உரியவர்கள் என்ற பிரக்ஞையும் ஏதோ ஒரு வகையில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. இந்தக் குழுநிலைவாதச் சிந்தனைதான், அடையாள அரசியலின் அத்திவாரம். ஆறறிவுள்ள அரசியல் விலங்கான மனிதன், தன் ஆறாம் அறிவான பகுத்தறிவைக் கொண்டு, அரசியலைப் பகுத்தறிந்து ஆதரிப்பான் என்பதே எதிர்பார்ப்பாகும். ஆனால், யதார்த்தம் அதற்கு முரணானதாக இருக்கிறது.

இது பற்றிக் கருத்துரைக்கும் அரசியல் விஞ்ஞான ஆய்வாளரான லிலியானா மேஸன், "பெரும்பாலும், கொள்கைக் கருத்தின் அடிப்படையில் எந்தக் கட்சியை ஆதரிக்க வேண்டும் என்பதை, குடிமக்கள் தேர்ந்தெடுப்பதில்லை; அவர்கள், எந்தக் கட்சியை ஆதரிக்கிறார்கள் என்பதைப் பொறுத்து, அவர்கள் தங்கள் கொள்கைக் கருத்தை மாற்றிக்கொள்கிறார்கள்... குடிமக்கள், தங்கள் அரசியல் மதிப்புகள் உறுதியானவை; நியாயமானவை என்று நம்ப வேண்டும். இருப்பினும், பெரும்பாலும், கொள்கை அணுகுமுறைகள் குழு அடிப்படையில்தான் வளரும்" என்கிறார்.

அதாவது, பொதுவில் ஒரு மனிதனின் குழு அடையாளம், அவனது அரசியல் அடையாளமாகிறது. குறைந்தபட்சம், அவனது அரசியலில் செல்வாக்குச் செலுத்துகிறது. சமகால அரசியல் எதிர்நோக்கும் பெருஞ்சவால் இதுதான்.

எல்லாக் கட்சிகளும் அரசியல்வாதிகளும், ஏதோ ஒரு வகையில் இந்த அடையாளச் சிக்கலுக்குள் சிக்கியிருக்கிறார்கள். அதிலிருந்து வெளிவருவதுதான் சமகால அரசியல் பெருஞ்சவால். நிற்க!

இலங்கையைப் பொறுத்தவரையில், 'சிங்கள-பௌத்த' பெருந்தேசியவாதம்தான் 1950களில் இருந்து, இலங்கை அரசியலை முன்னகர்த்தும் சக்தியாகத் திகழ்கிறது. பௌத்த பிக்கு, பிரதமரான எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவை, கைநீட்டிப் பேசும்போது, பண்டாரநாயக்கா கைகட்டி மௌனித்து நிற்கும் படம், 'சிங்கள-பௌத்த' பெருந்தேசியவாதத்தின் பலத்துக்கு மிகப்பெரிய உதாரணம்.

அதேவேளை, 'சிங்கள-பௌத்த' மக்களிடம் கொஞ்சம் கொஞ்சமாக, ஆழ வேரூன்றச் செய்யப்பட்டுள்ள 'சிங்கள-பௌத்த' பெருந்தேசியவாத உணர்வு, ஒரு வகையான தாழ்வுச்சிக்கல் மனநிலையிலேயே கட்டமைக்கப்பட்டு இருக்கிறது.

'எங்கே இந்த நாடு, சிங்கள-பௌத்தர்களுக்கு இல்லாமல் போய்விடுமோ; எங்கே சிங்களமும் பௌத்தமும் அழிந்துவிடுமோ; எங்கே சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை அடக்கி ஒடுக்கி விடுவார்களோ' என்ற அச்ச மனநிலை இது.

இதனால்தான் வரலாற்றறிஞர் கே.எம். டி. சில்வா, இதனை "சிறுபான்மையிருடைய மனநிலையிலுள்ள பெரும்பான்மை" என்று விளித்தார். ஆனால், இந்த மனநிலைதான், இலங்கையின் அரசியல்வாதிகளுக்கும் வாய்ப்பான விடயமாக அமைந்துவிட்டது. இந்த மனநிலையின் மொத்தப் பயனையும், அவர்கள் அறுவடை செய்ய விளைகிறார்கள். அதன் விளைவுதான், இங்கு காணப்படும் 'சிங்கள-பௌத்த' பேரினவாத அரசியல்.

அரசியலில் ஏதோவொரு பின்னடைவு ஏற்பட்டாலோ, வேறேதும் தவிர்க்க முடியாத பிரச்சினைகள் ஏற்படும் போதோ, மிகப்பலம் வாய்ந்த திசை திருப்பும் சக்தியாக, இலங்கையின் அரசியல்வாதிகள் இன-மத உணர்வுகளைப் பயன்படுத்தி வருவதை அவதானிக்கலாம். எந்த அரசியல் பிரச்சினையையும் சமாளிக்கத்தக்கதோர் பிரம்மாஸ்திரமாக, இன-மத தேசியவாதத்தைப் பார்க்கிறார்கள்.

மேற்சொன்ன குழுநிலைவாத மனநிலையும், குறித்த குழுவுக்குள்ள தாழ்வுச்சிக்கலும், அதன் விளைவான பாதுகாப்பற்ற மனநிலையும்தான் இந்த பிரம்மாஸ்திரத்தின் மூலக்கூறுகள்.

இன்று நாட்டின் பொருளாதாரம் சரிந்துபோயுள்ளது. கடனைத் திருப்பிச்செலுத்த மட்டுமல்ல, அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கே நாடு திணறிக்கொண்டுதான் இருக்கிறது. இன்று எரிவாயுவுக்காக மக்கள் வரிசையில் காத்துக்கிடக்கிறார்கள். எரிபொருளுக்காக மத்திய கிழக்கு நாடுகளிடம் இலங்கை கையேந்தி நிற்கிறது. அந்தக் கையேந்தலுக்கு பலன் கிடைக்காவிட்டால், நாடே ஸ்தம்பிக்கும் நிலை வரலாம்.

இரசாயன உரத்தை ஒரேயடியாகத் தடைசெய்கிறோம் என்ற 'அடி முட்டாள்'தனமான முடிவை எடுக்க, யார் ஆலோசனை வழங்கியதோ தெரியாது; அதனால் உள்ளூர் விவசாய, பெருந்தோட்ட உற்பத்திகள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

ஆகமொத்தத்தில், இலங்கை மக்களின் வாழ்வில் இருள் சூழ்ந்துள்ளது என்றால் அது மிகையல்ல. எதிர்காலம் பற்றிய அச்சம், பலரையும் பிடித்துள்ளதன் விளைவுதான், இன்று இளைஞர், யுவதிகள் வெளிநாடு செல்வதற்கான முயற்சியில் அதிகம் இறங்கியிருக்கிறார்கள். கடவுச்சீட்டுப் பெறுவதற்காக காத்திருக்கும் நீண்ட வரிசைகள் இதற்குச் சான்று.

எது இல்லாவிட்டாலும், வாழ நாடு இருக்கிறது என்ற ராஜபக்‌ஷர்களின் 'அடிப்பொடி'களின் வாய்வார்த்தை, இன்று பொய்த்துவிட்டது. யுத்தகாலத்தில் இருந்ததைவிட மிக மோசமான நிலையை, இலங்கை எதிர்நோக்கி இருக்கிறது. யுத்தகாலத்தில் கூட, நாட்டைவிட்டு வெளியேறிவிடவேண்டும் என்று எண்ணாதவர்கள் கூட, இன்று நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று எண்ணுகிறார்கள். எல்லாம் பொறிந்துவிழும் இந்த வேளையில், மீண்டும் 'இன-மத' பேரினவாத அஸ்திரம், கையிலெடுக்கப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

ராஜபக்‌ஷர்கள் மீண்டும் ஆட்சிக்கு வர, பெரும் ஆதரவளித்த முக்கிய பௌத்த பிக்குகள் சிலரே, ராஜபக்‌ஷர்களினதும் அவர்களின் ஆட்சியினதும் கடும் விமர்சகர்களாக மாறியிருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இது ராஜபக்‌ஷர்களுக்கு மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தது. 'சிங்கள-பௌத்த' தேசத்தின் பாதுகாவலர்களாகத் தம்மை முன்னிறுத்தும் ராஜபக்‌ஷர்களை, முக்கிய பௌத்த பிக்குகள் விமர்சிப்பதும், எதிர்ப்பதும் அவர்களின் அரசியல் அத்திவாரத்தையே ஆட்டிப்பார்க்கிற விடயமாகும்.

மேலும், எல்லாம் தோற்றுப் போய்க்கொண்டிருக்கிற சமகால சூழலில், ராஜபக்‌ஷர்களின் ஆட்சியைக் காப்பாற்றக்கூடிய கடைசி ஆயுதமாக இருப்பது 'சிங்கள-பௌத்த' தேசியவாதம்தான். ஆகவே, வேறு எதையும் பாதுகாக்க முடியாவிட்டாலும், அதைப் பாதுகாப்பது அவர்களின் அரசியல் இருப்புக்கும், தப்பிப்பிழைத்தலுக்கும் அவசியமான ஒன்றாகிறது.

இதன் விளைவாகத்தான், தமக்குப் பெரும் ஆதரவாக இருந்து அதன் பின்னர் அண்மைக் காலமாகத் தம்மைக் கடுமையாக விமர்சித்த, முக்கிய பௌத்த பிக்கு ஒருவரை மகிழ்விக்கும் விதமாக, அவரைக் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும், தமக்கு பெரும் ஆதரவாக இருந்த இன்னொரு பௌத்த பிக்குவை, களனிப் பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும் நியமித்திருக்கிறார்கள்.

இது ஒருபுறம் நடக்க, சர்ச்சைக்குரிய பௌத்த பிக்குவும் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்டு, கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பிக்குவுமான ஞானசாரவை, 'ஒரு நாடு, ஒரு சட்டம்' ஆக்குவதற்கான ஜனாதிபதி செயலணியின் தலைவராகவும் நியமித்திருக்கிறார்கள்.

ராஜபக்‌ஷர்களின் 'சிங்கள-பௌத்த' பெருந்தேசியவாத அரசியல் விளையாட்டின் அடுத்த 'இன்னிங்ஸ்'ஸாகவே, இவை பார்க்கப்பட வேண்டும். எல்லாம் தோற்கிறபோது, தம்மைக் காப்பாற்றும் அருமருந்தாக 'சிங்கள-பௌத்த' தேசியவாதத்தை ராஜபக்‌ஷர்கள் நம்புகிறார்கள்.

ஆனால், ராஜபக்‌ஷர்கள் ஒன்றை மறக்கிறார்களோ என எண்ணத்தோன்றுகிறது. இனமும் மதமும் குழுநிலைமனநிலையும், அரசியலைப் பொறுத்தவரையில் மிகப்பலமான ஆயுதங்கள்தான். ஆனால், பசி, பட்டினி ஆகியவற்றைவிட அவை பலமான ஆயுதம் அல்ல!

பொருளாதாரம் வீழ்ந்து, மக்கள் உணவுக்கும் அடிப்படைத் தேவைகளுக்கும் காத்துக்கிடக்கும் போது, தமது பிள்ளைகள் துன்புறுவதைப் பார்க்கும் போது, எந்த இனவாதமும் மதவாதமும் குழுநிலையுணர்வும், அந்த வேதனையை மறக்கடிக்கச் செய்யாது. அந்த அடிப்படையில், இந்த முறை, இந்த 'இன-மத' தேசியவாதத்திடமான சரணாகதி, ராஜபக்‌ஷர்களுக்குப் பயனிக்காது என்றே தோன்றுகிறது.



## வாழ்வியல் தரிசனம்

மரியாதைக்குரிய வார்த்தைகளைப் பேசுவதே, உயர் நாகரிகம் ஆகும். எனினும் சிலர் தங்களுடைய பேச்சில், 'நீ', 'உனக்கு' என, விழித்துப் பேசுவதுண்டு.

சில கிராமங்களில் மட்டுமல்ல, வீடுகளிலும் கூட, பெற்றோரையும் வயது முதிர்ந்தோரையும் ஏன் சகலரையும், கௌரவமாகப் பேசாமல், எடுத்தெறிந்து பேசுகிறார்கள். இதைக் கேட்கவே கஷ்டமாக இருக்கும்.

"நீங்கள்" எனப் பணிவுடன் சொன்னால் என்ன? மேலும், தன் முன்னே இருக்கும் மனிதர்களுடன், ஏகத்தாளமாக உரையாடுபவர்கள், 'ஆணவத்துடன் நட்புக் கொண்டவர்கள்' என, மற்றவர்கள் நினைப்பார்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்வதில்லை.

வாழ்க்கையில் எந்த நிலையில் வாழ்பவர்களுடனும் பணிவுடன் பழகவேண்டும். சிலரது பேச்சுகள் பிள்ளைகளுக்கே பிடிக்காது. அவ்வளவு கொடூரமாக இருக்கும்.

பாமர மக்களின் உரைகள், அப்பாவித்தனமாக இருக்கும். கேட்கும்போதும் பழகும்போதும், குணத்தில் வஞ்சக எண்ணம் இல்லை என்பதும் புரியும். ஒருவரின் உரையாடலில் இருந்தே, ஒழுக்கத்தைக் காணலாம். அழகானதும் தெளிவானதுமான வார்த்தைகள் அமிர்தம்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்



புத்தளம்:

### வெள்ளத்தால் வேளாண்மை பாதிப்பு

கடந்த சில நாள்களாகப் பெய்த கடும் மழை காரணமாக, புத்தளம் பழைய எலுவங்குளம் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நெற்பயிர் செய்கை நிலங்கள், வெள்ள நீரில் மூழ்கியுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடும் மழை காரணமாக, புத்தளம் மாவட்டத்தில் உள்ள பல இடங்களில், தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் தேங்கி நிற்பதுடன், ஆறுகள், குளங்கள் உள்ளிட்ட நீர் நிலைகளில் நீர் நிரம்பி வழிவதுடன், நீர்த் தேக்கங்களின் வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாகவும், நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையாலும் குறித்த நீர், நெல் வயல் நிலங்களினூடாக மேவிப் பாய்கிறது. இதனால், நெற்பயிர் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளதாக, விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன், கடும் மழை காரணமாக, மரக்கறிச் செய்கையும் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். கடன்களைப் பெற்றும் உரம் இல்லாமலும், குறித்த நெற் செய்கையை மேற்கொண்டதாகத் தெரிவித்த விவசாயிகள், 10 -20 நாள்களைக் கொண்ட நெற்பயிர்களே, இந்த வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

ரஸீன் ரஸ்மின்

LK Newspapers Viber Community




# வட்டக்கச்சியில் இலங்கை வங்கியின் சேவை நிலையம்

■ மு.தமிழ்ச்செல்வன்

வட்டக்கச்சியில் இலங்கை வங்கியின் முகவர் வங்கியியல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி, இலங்கை வங்கியால் வட்டக்கச்சி, கட்சன் வீதியில் இலங்கை வங்கியின் முகவர் வங்கியியல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த, இரண்டாம் திகதி இலங்கை வங்கியின் வட மாகாண பொது முகாமையாளர் வி. சிவானந்தன், பிரதேச முகாமையாளர் திருமதி சு. நேதானந்தன், கிளிநொச்சி கிளை முகாமையாளர் க.அலன், கிராம அலுவலர் ஜோன் ஜெகநாதன் ஆகியோர் கலந்துகொண்டு இந்நிலையத்தைத் திறந்து வைத்தனர்.

இதன் மூலம், அப்பிரதேச மக்கள் இதுவரை காலமும் கிளிநொச்சி நகருக்கு சென்று மேற்கொண்ட வங்கி நடவடிக்கைகளான பணம் வைப்புச் செய்தல், பணம் மீளப் பெறுதல், இலங்கை வங்கி கணக்குகளுக்கு பணம் அனுப்புதல், கட்டளைகளுக்கான பணம் செலுத்துதல், மீள் நிரப்பும் நடவடிக்கை என காலை 8 மணி முதல் மாலை 7 மணி வரை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக

# ஜேசன் அவன்செனியா நியமனம்



நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக ஜேசன் அவன்செனியா நியமிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை மற்றும் மாலைதீவில் நெஸ்லே நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு அவர் தலைமை வகிப்பார். 2021 ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன், இதற்கு முன்னர் முகாமைத்துவப் பணிப்பாளராக கடமையாற்றிய ஃபேப்ரிஸ் காவலீனிடமிருந்து, கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதுடன், ஆசியா, ஓசானியா, ஆபிரிக்காவுக்கான பிராந்திய முகாமைத்துவ அணியின் அங்கத்தவராக சுவிட்சர்லாந்துக்கு ஃபேப்ரிஸ் காவலீன் இடம்மாறியுள்ளதுடன், நெஸ்லே ஊட்டச்சத்து வணிகத்தை நிர்வகிக்கவுள்ளார்.

பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புகள், ஊட்டச்சத்து ஆகியவற்றில் வலுவான பின்னணியுடன், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, சுவிட்சலாந்து, பாகிஸ்தானில் நெஸ்லே நிறுவனங்களில் 24 வருட கால அனுபவத்துடன் ஜேசன், நெஸ்லே லங்கா நிறுவனத்தில் இணைந்துள்ளார்.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் உயர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்பு ஜேசன், நெஸ்லே பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானில் ஊட்டச்சத்து, பால் மூலமாகக் கொண்ட தயாரிப்பு வணிகங்களுக்கான வணிக நிர்வாக அதிகாரியாக கடமையாற்றியுள்ளார். அவர் தயாரிப்புத் துறை முகாமைத்துவம், புத்தாக்கம், டிஜிட்டல் மேன்மை, வலுவான அணி மேம்பாடு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வணிக விரைவுபடுத்தலை வழிநடத்தியுள்ளார்.

### புதிய மொபிடெல் தலைமையகத்தை

# நிறுவும் பணிகள் ஆரம்பம்



SLT-MOBITEL, தனது மொபிடெல் நிறுவனத்தின் தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்தப்பட்ட தலைமையக கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லை அண்மையில் நாட்டியிருந்தது. வெலிகட பகுதியில் நிர்மாணிக்கப்படும் இந்த நவீன வசதிகள் படைத்த ஒன்பது மாடிக் கட்டடம், SLT-MOBITEL இன் முதலாவது சூழலுக்கு நட்பான உள்ளம்சங்களைக் கொண்டிருக்கும்.

கட்டட நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்ததும் நகரில் பரந்து காணப்படும் சகல மொபிடெல் அலுவலகங்களும் ஒரே கூரையின் கீழ் கொண்டு வரப்படும். இதனூடாக பெருமளவு தொகை சேமிக்கப்படும் என்பதுடன், இதன் ஒரு மாடி ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கப்படும்.

SLT-MOBITEL இன் ஸ்மார்ட் அலுவலக கொள்கைக்கு ஆதரவளிக்கும் வகையில் தந்திரோபாய ரீதியில் வடிவமைக்கப்பட்ட இந்த அலுவலகம், உயர் மட்ட தொழில்நுட்ப உள்ளம்சங்களைக் கொண்டிருக்கும். 7 ஏக்கர் காணிப்பகுதியில் 175,000 சதுர அடிப்பரப்பில் வலுச் சிக்கனம், நிலைபேறு, உற்பத்தித்திறன் மிக்க வசதிகளுடன் நிர்மாணிக்கப்படும் இந்தக் கட்டடம், மதிநுட்பமான பணிச் சூழலைக் கொண்டிருக்கும்.

அத்துடன், ஊழியர்களுக்கு புதிய வழமையைப் பின்பற்றி, நவீன உள்ளம்சங்களைக் கொண்டிருக்கும். ஊழியர்களின் உளவியல், உடல்சார் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தும் உள்ளம்சங்களையும் கொண்டிருக்கும். மேலும், சொத்தின் நிர்மாணம் என்பது, SLT-MOBITEL இன் இலங்கையை எதிர்காலத்துக்கு தயார்படுத்தும் தொழில்நுட்பங்களான NB IOT, AI, Big Data, 5G ஆகியவற்றைக் கொண்டு அமைந்திருக்கச் செய்யும்.

புதிய மொபிடெல் தலைமையக கட்டடம், வலு நேர்த்தியான கட்டடமாக அமைந்திருப்பதுடன், அதன் ஆயுள் காலம் முழுவதிலும் தூய புதுப்பிக்கத்தக்க வலுவை பிறப்பிக்கும் வகையில் அமைந்திருக்கும். SLT-MOBITEL இன் முதலாவது சூழலுக்கு நட்பான கட்டடம் எனும் வகையில், Green Building Council of Sri Lanka (GBCSL) இடமிருந்து Platinum Green தரப்படுத்தலை பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளது.

நிலைபேறாண்மை, மதிநுட்பமான உள்ளம்சங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்துவதுடன், இந்தக் கட்டடத்தில் நவீன வலுச் சிக்கனமான ஒளியூட்டல், வலு மற்றும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு, கழிவு நீர் சுத்திகரிப்பு, வலு தொடர்பான கண்ணாடி பொருத்துகைகள், வலு தொடர்பான மின்பொருத்துகைகள், பாரமுயர்த்திகள், வாயு குளிர வைப்பு கட்டமைப்புகள் போன்றன காணப்படும்.

முதல் கட்டத்தின் கீழ் சகல வசதிகளுடனும் 100,000 சதுர அடிப்பகுதி நிர்மாணிக்கப்படும். நிறுவனத்துக்குள் பரந்தளவு பணிக் கட்டமைப்புக்கு பொருந்தும் வகையில், வினைத்திறன் அதிகரிப்பு, உற்பத்தித் திறன், புத்தாக்கம் ஆகியவற்றைக் கொண்டதாக அமைந்திருக்கும். அதைத் தொடர்ந்து வரும் கட்டங்களில் இதர வசதிகளான வாகனத் தரிப்பிடம், வரவேற்புப் பகுதி, நவீன உணவகம், களிப் ஹவுஸ் வசதிகள், பொழுது போக்குப் பகுதிகள், நீச்சல் தடாகம், விளையாட்டு அறை, வதிவிடத் தொகுதி, நிலக் கட்டமைப்பு, வீதி வலையமைப்புகள் போன்றன நிர்மாணிக்கப்படும்.

சென்னை

### சென்னையில் கனமழை:

# தமிழக முதலமைச்சர் நேரில் ஆய்வு



சென்னையில் பெய்துவரும் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் நேற்று (07) நேரில் ஆய்வு செய்தார்.

வங்கக் கடலில் நிலவும் வளிமண்டல தாழமுக்கம் காரணமாக, தமிழகத்தில் வட கடலோர மாவட்டங்களில் கனமழைபெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் முன்னரே எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்த நிலையில், சென்னையில் சனிக்கிழமை (06) இரவு முதல் ஞாயிறு காலை 5 மணிவரை இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்தது.

சென்னையில் அதிகபட்சமாக நுங்கம்பாக்கத்தில் 20 சென்றி மீட்டர் கனமழை பதிவாகியுள்ளது. எம்.ஆர்சி நகர், அண்ணா பல்கலைகழகம், வில்லிவாக்கம், பெரம்பூர், மீனம்பாக்கம், தரமணி, நந்தனம் ஆகிய பல இடங்களில், 10 சென்றி மீட்டருக்கு மேல் மழை பதிவாகியுள்ளது. இதனால் நகரின் பல பகுதிகள் நீரில் மூழ்கின.

இந்த நிலையில், கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அமைச்சர்களுடன் நேரில் ஆய்வு செய்தார். அதன்படி சென்னை, வேப்பேரி, பேரக்ஸ் ரோட் பகுதியை முதலமைச்சர் ஸ்டாலின் பார்வையிட்டார்.

மழை வெள்ளத்தை வெளியேற்ற, துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.



கொடைக்கானல்

### 200 அடி பள்ளத்தில் கார் கவிழ்ந்து விபத்து

# குழந்தை உட்பட மூவர் பலி

கொடைக்கானல் அருகே கார் கவிழ்ந்த விபத்தில், மூன்று பேர் பலியான சம்பவம் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலுக்கு வத்தலகுண்டு, பழனி வழியே வழக்கமான போக்குவரத்து நடக்கிறது. மாற்று வழித்தடமாக அடுக்கம் - பெரியகுளம் வீதி, சில ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டு, முடிவுறும் நிலையில் உள்ளது. இந்த மலைப் பாதையில் மழை பெய்யும்போது அவ்வப்போது மண்சரிவு ஏற்படுவது வழக்கம்.

மதுரை அருகே சமயநல்லூரைச் சேர்ந்த வழக்கறிஞரும் அவரது மனைவியும் மூன்று மாதக் குழந்தை, மாமியார் மற்றுமோர் உறவினரும் காரில் கொடைக்கானல் சுற்றுலா சென்றுள்ளனர்.

இரவு நேரத்தில், ஊர் திரும்பிய வழியில், சாரல் மழையும் பனிமூட்டமாகவும் காணப்பட்டுள்ளது. பயணித்துக் கொண்டிருக்கும் போது நிலைதடுமாறிய கார், கிழவிப்பாறை பகுதியில் 200 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் மனைவி, மாமியார், குழந்தை ஆகியோர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். காயமடைந்த உறவினரும் வழக்கறிஞரும் தேனி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

### மழை, வெள்ளப் பாதிப்புகளில் இருந்து

# மக்களை காப்பாற்றுங்கள்



அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர் செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் இணைந்து, வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவது:

வடகிழக்கு பருவ மழையின் தொடக்க நிலையிலேயே சென்னை மாநகர வீதிகளில் ஆறுபோல் தண்ணீர் ஓடுவதையும் சென்னை நகரே குளம்போல் தண்ணீர் சூழ்ந்து காணப்படுவதையும் இதனால் ஏழை, எளிய, நடுத்தர மக்களின் இருப்பிடங்களுக்குள் தண்ணீர் புகுந்து அவர்கள் அல்லல்படுவதையும் பார்க்கும்போது மிகுந்த மனவேதனையும் துயரமும் ஏற்படுகின்றன.

அண்மைக் காலத்தில், நமது அண்டை மாநிலங்களில் ஏற்பட்ட மழை, வெள்ள பாதிப்புகளை பார்த்த பிறகேனும் உரிய முன்னேற்பாடுகளை தமிழ்நாடு அரசாங்கம் மேற்கொண்டிருக்க வேண்டும். வருமுன் காக்கும் வழிகளில் கவனம் செலுத்தியிருந்தால் தலைநகரம் சென்னையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் இவ்வளவு விரைவில் இத்தகைய பெரிய பாதிப்பை சந்தித்திருக்கமாட்டா. பருவநிலை மாற்றம் காரணமாக பெருமழை, கடும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிட்ட நிலையில் வருமுன் காப்பதே மக்களை காக்க நமக்கிருக்கும் ஒரே வழி. இதனை உணர்ந்து தமிழ் நாடு அரசு விவேகத்துடனும் விரைந்தும் செயற்பட வேண்டும். மக்களின் உயிரும் உடைமையும் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் வலியுறுத்தலாகும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுடெல்லி

# இந்தியாவுக்கு பிரான்ஸ் இராணுவ உதவி



இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில், இராணுவத் துறையில் இந்தியாவுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக பிரான்ஸ் கூறியுள்ளது. இந்தியா- பிரான்ஸ் இடையேயான இராணுவ உறவு தொடர்பான ஆண்டு கூட்டம் பாரிசில் நடந்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரோனின் வெளிநாட்டு ஆலோசகர் இமானுவல் போன்னியை, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் சந்தித்துப் பேசினார். இந்தியாவின் இராணுவ தளவாடத் தொழில் உற்பத்தியை ஊக்குவிக்க அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக பிரான்ஸ் கூறியுள்ளது.

இதற்கு தேவையான ஆராய்ச்சியில் முழுமையாக பங்கேற்பதாகவும் இந்தோ - பசிபிக் பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டும் வகையில், இந்தியாவுடன் இராணுவத் துறையில் முழு ஒத்துழைப்பு அளிப்பதாகவும் பிரான்ஸ் கூறியுள்ளது.

சென்னை

# தமிழகத்தில் ஒரேநாளில் 10 பேர் பலி

தமிழகத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 875 இலிருந்து 862 ஆக குறைந்துள்ளது. நேற்றுமுன்தினம் மட்டும், ஒரேநாளில் 10 பேர் பலியானது சற்றுப்பாதிப்பை ஏற்றபடுத்தியுள்ளதாக சென்னை சுகாதாரத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சுகாதாரத்துறை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: தமிழகத்தில் 1,01,023 மாதிரிகள் கொரோனா பரிசோதனை செய்யப்பட்டன. அதில், 862 பேருக்கு பாதிப்பு உறுதியாகி உள்ளது. இதன் மூலம் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 27,08,230 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது வரை 5,18,30,749 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன. கொரோனா உறுதியானவர்களில் 521 பேர் ஆண்கள் 341 பேர் பெண்கள். இதனால் பாதிக்கப்பட்ட ஆண்களின் எண்ணிக்கை 15,80,638 ஆகவும் பெண்களின் எண்ணிக்கை 11,27,554 ஆகவும் அதிகரித்து உள்ளது.




Lk Newspapers Viber Community

ஈராக்

பிரதமரின் வசிப்பிடம் மீதான ட்ரோன் தாக்குதல்:

# பிரதமர் பாதுகாப்பாக உள்ளார் - இராணுவம்

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நேற்று (07) பிரதமர் முஸ்தஃபா அல்-கட்ஹிமி மீதான கொலை முயற்சி ஒன்றில், அவர் காயமில்லாமல் தப்பியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



பச்சை வலயத்திலுள்ள பிரதமர் கட்ஹிமியின் வசிப்பிடத்துக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த அவரின் தனிப்பட்ட பாதுகாப்புப் படையின் ஆறு உறுப்பினர் காயமடைந்ததாக பாதுகாப்புத் தகவல் மூலங்கள் றொய்ட்டர்ஸுக்குத் தெரிவித்துள்ளன.

இத்தாக்குதலுக்கு மூன்று ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டதாக உள்நாட்டமைச்சின் பேச்சாளர் தெரிவித்ததாக அரச செய்தி முகவரகமான ஐ.என்.ஏ தெரிவித்துள்ளது. இவற்றில், இரண்டு சுட்டு வீழ்த்தப்பட்ட நிலையில், மூன்றாவதே பிரதமர் கட்ஹிமியின் வசிப்பிடத்தைத் தாக்கியுள்ளது.

இந்நிலையில், இத்தாக்குதலுக்கு உடனடியாக எக்குழுவும் உரிமை கோரியிருக்கவில்லை. அரசாங்கப் படைகளுக்கும், ஈரான் ஆதரவு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களுக்கும் இடையிலான மோதல்களின் இரண்டு நாள்களிலேயே குறித்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

உ. அமெரிக்கா

நிறுவனங்களுக்கான தடுப்பூசி கட்டாயம்:

# பைடனின் உத்தரவை முடக்கிய நீதிமன்றம்



வர்த்தகங்களுக்கு தடுப்பூசியை கட்டாயமாக்கும் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் திட்டங்களை அந்நாட்டு மேன்முறையீட்டு நீதிமன்றம் தற்காலிகமாக முடக்கியுள்ளது.

ஜனாதிபதி பைடனின் உத்தரவுப்படி, 100க்கும் அதிகமான பணியாளர்களைக் கொண்ட தனியார் நிறுவனங்களின் பணியாளர்கள், கொரோனா வைரஸுக்கு எதிராக முழுமையாகத் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என்பதுடன் அல்லது வாராந்தம் சோதனை செய்து கொள்ள வேண்டும் என, அடுத்தாண்டு ஜனவரி மாதம் அறிமுகப்படுத்தப்படவுள்ள குறித்த சட்டத்தில், பாரிய அரசியலுரிமைப் பிரச்சினைகள் இருப்பதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.



இஸ்ரேல்

ஜெருசலேம்

# இஸ்ரேலின் தலைநகர் மாத்திரமே: பெனிட்

பாலஸ்தீனர்களுக்கான ஐக்கிய அமெரிக்க துணைத் தூதரகத்தை ஜெருசலேத்தில் மீளத் திறக்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் திட்டத்தை இஸ்ரேல் எதிர்ப்பதாக அந்நாட்டுப் பிரதமர் நஃப்தாலி பெனிட் தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய வகையில் டெல் அவிவ்விலிருந்த இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதரகத்தை ஜெருசலேத்துக்கு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மாற்றியிருந்தார்.

பாலஸ்தீனர்களுக்கு தூதரகமாகக் காணப்பட்ட துணைத் தூதரகமானது, குறித்த தூதரகத்துக்குள் பாலஸ்தீன விவகாரப் பிரிவாக மாற்றப்பட்டிருந்தது.

ஸ்பெய்ன்

# தப்பிய பயணிகளால் மூடப்பட்ட விமான நிலையம்

ஸ்பெய்னுக்குள் சட்ட ரீதியற்ற முறையில் அகதிகள் நுழைய முயன்றதாகக் கூறப்பட்டதையடுத்து ஸ்பெய்னின் நெருக்கடியான விமான நிலையமொன்று நான்கு மணித்தியாலங்கள் வெள்ளிக்கிழமை (05) மூடப்பட்டிருந்தது.

மொரோக்கோவின் கஸப்லங்காவிலிருந்து துருக்கியின் இஸ்தான்புல்லுக்கு பயணித்த விமானமானது,



விமானத்தில் மருத்துவ அவசரநிலை காரணமாக பல்மா டீ மலோக்ராவுக்குத் திருப்பப்பட்டிருந்தது.

ஜேர்மனி

ரயிலில் கத்திக் குத்துத் தாக்குதல்

# மூவர் படுகாயம்

தென் ஜேர்மனியில், கடுகதி ரயில் ஒன்றில் கத்திக் குத்துத் தாக்குதலில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், தாக்குதல் இடம்பெற்ற சிறிது நேரத்தில் தாக்குதலாளி எனக் கூறப்படும் 27 வயதான சிரியரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்நிலையில், தாக்குதலுக்கான காரணம் இன்னும் தெளிவில்லாமலுள்ளது.

குறித்த நபர் 2014ஆம் ஆண்டு ஜேர்மனிக்குள் நுழைந்த பின்னர், அகதி அந்தஸ்தைப் பெற்றதாகவும், உளச் சிக்கல்களால் பாதிக்கப்படுவதாக ஜேர்மனிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.






இருபதுக்கு 20 உலகக் கிண்ணம்

# அரையிறுதியில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிகளுக்கு, குழு ஒன்றிலிருந்து இங்கிலாந்தும் அவுஸ்திரேலியாவும் தகுதி பெற்றுள்ளன.

இக்குழுவில் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா தவிர தென்னாபிரிக்காவும் எட்டுப் புள்ளிகளைப் பெற்றபோதும் ஓட்ட விகிதத்தின் அடிப்படையில் இங்கிலாந்தும் அவுஸ்திரேலியாவும் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர். ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இங்கிலாந்துடனான போட்டியில் தென்னாபிரிக்கா வென்றிருந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

தென்னாபிரிக்கா: 189/2 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: றஸி வான் டர் டுஸன் ஆ.இ 94 (60), ஏய்டன் மார்க்ரம் ஆ.இ 52 (25), குயின்டன் டி கொக் 34 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொயின் அலி 1/27 (4), அடில் ரஷீட் 1/32 (4))




இங்கிலாந்து: 179/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மொயின் அலி 37 (27), டேவிட் மலான் 33 (26), லியாம் லிவிங்ஸ்டோன் 28 (17), ஜொஸ் பட்லர் 26 (15), ஜேஸன் றோய் 20 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: தப்ரையாஸ் ஷம்சி 2/24 (4), கேஷவ் மஹராஜ் 0/23 (3), அன்றிச் நொர்ட்ஜே 1/34 (4), ககிஸோ றபாடா 3/48 (4), டுவைன் பிறிட்டோறியஸ் 2/30 (3))

போட்டியின் நாயகன்: றஸி வான் டர் டுஸன்

இப்போட்டியின் இறுதி ஓவரின் முதல் மூன்று பந்துகளிலும் முறையே கிறிஸ் வோக்ஸ், அணித்தலைவர் ஒய்ன் மோர்கன், கிறிஸ் ஜோர்டானை வீழ்த்திய ககிஸோ றபாடா, ஹட்-ட்ரிக்கை நிகழ்த்தியிருந்தார்.

இதேவேளை, முன்னதாக அபு தாபியில் நடைபெற்ற நடப்புச் சம்பியன்கள் மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியில் அவுஸ்திரேலியா வென்றிருந்தது.

இந்நிலையில், டுபாயில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நமீபியாவை இந்தியா எதிர்கொள்ளவுள்ளது.

ஜேர்மனிய புண்டெலிஸ்கா தொடர்

# டொட்டமுண்டை வென்ற லெய்ப்ஸிக்

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெலிஸ்கா தொடரில், ஆர்.பி லெய்ப்ஸிக்கின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் பொரூசியா டொட்டமுண்ட் தோற்றது.

டொட்டமுண்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்கோ றொய்ஸ் பெற்றதோடு, லெய்ப்ஸிக் சார்பாக கிறிஸ்தோபர் என்குங்கு, யூஸூப் பௌல்சென் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.





ஸ்பானிய லா லிகா தொடர்

# சமநிலையில் பார்சிலோனா செல்டா விகோ போட்டி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், செல்டா விகோவின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் பார்சிலோனா முடித்துக் கொண்டது. பார்சிலோனா சார்பாக, அன்சு பாட்டி, சேர்ஜியோ புஷ்கட்ஸ், மெம்பிஸ் டிபே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். செல்டா சார்பாக, லாகோ அஸ்பஸ் இரண்டு கோல்களையும், நொலிட்டோ ஒரு கோலையும் பெற்றனர்.


இங்கிலாந்து பிறீமியர் லீக்

# யுனைட்டெட்டை வென்ற சிற்றி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மன்செஸ்டர் சிற்றியுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் யுனைட்டெட் தோற்றது.

சிற்றி சார்பாக பெர்ணார்டோ சில்வா ஒரு கோலையும், மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையிலும் பெறப்பட்டிருந்தது.

இதேவேளை, செல்சியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், பேர்ண்லிக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை கை ஹவேர்ட்ஸ் பெற்றிருந்ததோடு, பேர்ண்லி சார்பாகப் பெறப்பட்ட கோலை மடெஜ் விட்ரா பெற்றிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 08 நவம்பர் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.